304

# ஜகன்மோகினி

ஆசிரியை:

வை.மு.கோதைநாயகி அம்மாள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 APR 1939
MADRAS

## பொங்கலோ பொங்கல்!
## போகியோ போகி!!

304



ஜனவரி 1939

கஸ்தூரி திலகம் அல்லது

காருணம்ருதம் (ஆரம்பம்)

1 JANUARY 1939

அணு 2

# ஜகன் மோகினி

தொடர் நாவல் வெளிவரும் மாதப் பத்திரிகை

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

**16**-வது ஆண்டு ஆரம்பம் — வருஷ சந்தா ரூ. **1-8**

ஜனவரி **1939** — தனிப்பிரதி அணா. **2**

## ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனம்

ரூ. 25/- அனுப்புவோருக்கு, "ஜகன்மோகினி" மாதப் பத்திரிகையை இனமாக அனுப்புவதுடன், நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு நம்மால் வெளியிடப்படும் எல்லா நாவல்களும் இனமாக அளிக்கப்படும்.

குறிப்பு:—தயவுசெய்து முன்பணமாகவே அனுப்பவும். வி. பி. கிடையாது.

---

## ஸ்ரீமதி: வை. மு. கோதைநாயகி அம்மாள், எழுதிய நாவல்கள்

**ரூ. 2-8**

வைதேகி 2 (பாகங்கள்)
ராதாமணி 2 (பாகங்கள்)
சாருலோசனை
பத்மசுந்தரன்
காதலின் கனி

**ரூ. 2**

நவநீதகிருஷ்ணன்
ருக்மிணிகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

**ரூ. 1-12**

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி

**ரூ. 1-8**

சோதனையின் கொடுமை

**ரூ. 1-4**

பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
வாழ்க்கையின்நாதம்
ஜீவியச்சுழல்

**ரூ. 1**

சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்

**அணா 14**

கோபாலரத்னம்
புத்தியே புதையல்

**அணா 12**

கதம்பமாலை

**அணா 10**

பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

**அணா 8**

நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின்பரிபவம்
பிச்சைக்காரக்குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
வத்ஸகுமார்
மாலதி

**அணா 6**

பக்ஷமாலிகா

**அணா 4**

ஜெயலக்ஷ்மி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின்சிகரம்
ஸரஸராஜன்
உளுத்த இதயம்

---

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

**26**, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

17 APR 193

# எனது நன்றியறிதல்

ஸ்ரீயப்பதியாய், ஸ்ரீநிகேதனனாய், கருணாசாகரமாய் கோயில் கொண்டருளியிருக்கும என்னப்பன் ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமியின் பரிபூர்ண அருள்மாரியினாலும், உங்கள் பேராதரவினாலும் நம் மோகினிச் செல்வியின் 15 ஆண்டுகள் இனிது முடிந்து, ஜனவரி 1939 முதல் மங்களகரமான பதினாறாவது ஆண்டு ஆனந்தமாய் பிறந்துவிட்டது. எங்கும் மங்கள வாத்திய கோஷமும், கல்யாண மந்திர கோஷமும், இனிய சங்கீதமும் ஒலிக்கச் செய்து பொங்கி மகிழவைக்கும் புது வருடமாகிய தை மாதமும் சந்தோஷத்துடன் பிறக்கப்போகிறது.

இந்தப் புது வருடம் நம் எல்லோருக்கும் ஓர் புதிய மணத்துடனும், அபாரமான ஆனந்தத்துடனும், சகல சௌபாக்கியங்களுடனும் இனிது இருக்கும்படியான அருள் மாரியைப் பொழிய வேண்டி எம்பெருமானின் அடிகளைப் பலகாலும் துதித்து வேண்டுகிறேன். ஆண்டவன் அதற்கு அருள் புரிவாராக.

"15 ஆண்டுகள் இன்பமுடன் ஆதரித்த அறிவு மிகுந்த எனது அரிய போஷகர்களே! இப் பதினாறாவது ஆண்டிலும் என்னைக் கைவிடாது உங்களுடைய சிநேகிதர்களையும் சிபார்சு செய்து, அவர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்த்து ஆதரித்து மகிழ்வியுங்கள்" என்று மோகினி உங்களை மெல்லிய இனிய குரலில் வேண்டிக்கொள்கிறாள்.

## வத்ஸகுமார்

யாதொரு விதமான முன்னறிவிப்புமின்றி வெளியான "வத்ஸ குமார்" என்னும் புதிய புத்தகத்திற்காகப் பல அன்பர்கள் தமது சந்தாவுடன் பணம் அனுப்பியதற்கு, எனது வந்தனத்தைத் தெரிவிப்பதுடன், மற்ற நேயர்களும் தமது சந்தாவுடன் அதன் விலையைச் சேர்த்து அனுப்புவார்களென்று நம்புகிறேன்.

வழக்கம்போல, இந்த முதல் சஞ்சிகையை எல்லோருக்கும் அனுப்பி இருக்கிறோம். இரண்டாவது சஞ்சிகையிலிருந்து சந்தா செலுத்தியவர்களுக்கு மட்டுந்தான் வருமாதலால், "மோகினி"யின் அன்பர்களைத் தமது சந்தாவுடன், சிநேகிதர்களின் சந்தாவையும், ஜனவரி மாதக் கடைசிக்குள் அனுப்பி, ஆதரிக்கும்படித் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் நன்றியுள்ள

சகோதரி,

வை. மு. கோதைநாயகி.

12-வதாண்டிலிருந்து ("மங்களபாரதி" ஆரம்பம் முதல்)
இதுவரைத் தொடர்ச்சியாக ஆதரித்து, புது வருஷச் சந்தாவை
ஜனவரி முடிவுக்குள் அனுப்புகிறவர்களுக்கு

## தனிப்பரிசு

16-வது ஆண்டின் சந்தாவை அனுப்புகையில், உங்களது சந்தா நம்பரைக் குறித்து, நமது நாவல்களில் முழு விலை ரூ. 2 (சந்தா நேயர்களுக்குக் குறைந்த விலையல்ல.) பெறுமான நாவல்களின் பெயரை எழுதி இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். ரூ. 2-க்கு மேற்பட்ட விலையுள்ள நாவல்கள் வேண்டுமாயின், அதிகமாகும் பணத்தை அனுப்பவேண்டும். இனாம் நாவல்களின் தபாற் செலவுக்காக (ரிஜிஸ்டிரேஷன் செலவு உள்பட) உள்நாட்டினர் அணா ஆறும், வெளிநாட்டினர் அணா எட்டும் சேர்த்து அனுப்பவும்.

குறிப்பு :—10, 11-வதாண்டு முதல் 14, 15-ஆண்டுவரையில் சந்தாதாரராயிருந்ததற்காக ஏற்கெனவே இனாம் நாவல் பெற்றவர்கள் மறுபடியும் 16-வதாண்டுக்கும் பெற முடியாதென்பதைக் கவனிக்கவும்.

---

## 16-வதாண்டுப் பரிசுகளின் விவரம்

1938-ம் வரு டிசம்பர் மீ 20 தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால், அனுப்புகிறேம்.

| பரிசு ந. | ரூ. | சந்தா ந. | | |
|---|---|---|---|---|
| 1. | 20 | எஸ். | 1068 | செக்ரடரி, வி. எல். யூனியன் நன்னிமங்கலம். |
| 2. | 15 | ஆர். | 769 | ஸ்ரீமதி பி. எஸ். ராஜலக்ஷ்மி, ஜி. டி. சென்னை. |
| 3. | 10 | ஆர். | 739 | ஸ்ரீமதி ராஜ் சாமியூல், நாஜராத். |
| 4. | 5 | ஜி. | 203 | ஸ்ரீ கே. கோபாலன் நாயர், சுன்கெய் சோ. (எப். எம். எஸ்.) |
| 5. | 5 | எஸ். | 949 | ஏகே. ஏஆர். சுப்பையா, மண்டலே. |
| 6. | 5 | ஆர். | 671 | ஸ்ரீமதி வி. எஸ். ராஜம்மாள், கொழும்பு. |

## பிப்ரவரி மீ 20 தேதிக்குள்

சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு, 6 சீட்டுகள் எடுத்து அவற்றிற்குக் கீழ்க்கண்ட தொகையுள்ள புத்தகங்கள் பரிசாகக் கொடுக்கப்படும்.

| ரூ. 15 முதற் பரிசு | ரூ. 10/-ல் இரண்டு பரிசுகள் | ரூ. 5/-ல் மூன்று பரிசுகள் |
|---|---|---|

183029

ஸ்ரீ

# கஸ்தூரி திலகம்




## 1

### பொங்கல் புதுமலர் ; பொங்கும் புகழ்மணம்

"அபரிமிதமான ஆனந்தம் பொங்குகிறது. பொங்கலோ! பொங்கல். போகியோ! போகி. பச்சைப் பொங்கல், பாலு பொங்கல், சக்கரை பொங்கல், பொங்கலோ பொங்கல்" என்று சிறுமிகள் சந்தோஷத்துடன் கூடிக் கும்மி யடித்தபடியே, தனுர் மாதம் முடிந்து, கல்யாண மாதமாகிய தை பிறந்துவிட்டதை அறிவிக்கிறார்கள் பார்த்தையா அம்பீ!

உலகத்திலில்லாத வழக்கம் உனக்குமட்டும் என்ன வந்துவிட்டது? இனியும் தாதை என்று குதிக்காதே! கல்யாணம் செய்தே தீர வேண்டும்" என்று மீனலோசனியம்மாள் தன்னருமைக் குமாரன் ஆத்மநாதனை நோக்கித் தெரிவித்தாள்.

ஆத்மநாதன் :—இரும்மா! லொட லொடவென்று பேசாதே. அச் சிறுமிகளின் பாட்டைக் கேட்கலாம்—என்றான். அதற்குள், சிறுமிகளும் இவர்களின் வீட்டு வாசலிலேயே கும்மி யடிக்க ஆரம் பித்தார்கள்.

மீனலோசனி :—ஆமாம்! இவர்கள் பெரிய சங்கீதம் பாடு கிறார்கள் பாரு. இதைத்தான் நீ ஆனந்தமாய்க் கேட்கவேண்டு மாக்கும். பேசாமல் காசைக் கொடுத்து அனுப்பிவிடுகிறேன்.

ஆத்ம :—இரும்மா! சங்கீத சாஸ்திரமும், சாஹித்திய சுத்தமும் தெரிந்து பாடிவிட்டால் என்ன ஒசத்தி? இவர்களுடைய கர்னாடக மான நாட்டுப் பாட்டில் என்ன இனிமை இருக்கிறது பாரேன். சிறுமிகளுடைய சாரீரத்தின் ஜிலுஜிலுப்பு, பெரிய வித்வான் களுக்குக்கூட வருவதில்லை. இதெல்லாம் அமைப்பு—என்றான். அப்போது டெலிபோன் மணி கண கணவென்று அடித்தது.

ஆத்மநாதன், "ஹல்லோ! யாரது?"....நான்தான் சோமு; பையனுக்கு உடம்பு சரியில்லை. சீக்கிரம் வரவேணும்....என்ன உடம்பு? எப்போதும் இருக்கும் உடம்பு தானே....சரி....வருகி றேன்"....என்று கூறிக்கொண்டே ரிஸீவரை வைத்தான்.

கும்மியும் முடிந்தது; பெண்கள் அரிசியும் காசையும் வாங்கிக் கொண்டு போனார்கள். வீதியில் செல்லும் ஜனங்களெல்லாம் கருப்புக் கழியும், பூஷணிக்காயும், மஞ்சள் கொத்தும் இலையும், கதிருடன் தானியங்களும் எடுத்துக்கொண்டு புதிய உடையுடன் ஆனந்தமாய்ச் செல்லும் காட்சி ஆத்மநாதனின் மனத்திற்குப் பிரமானந்தமாய் இருந்தது.

மீன :—என்னடாப்பா! நான் கேட்கிறேன். நீ பேசாமல் சொக்காயைப் போட்டுக்கொள்கிறாயே.

ஆத்ம :—என்னம்மா இது. நீயும் சமய மறியாது பேசுகிறாய். ஊரெல்லாம் சந்தோஷத்தால் பொங்கிப் பூரிக்கும் பொங்கல்




போங்கலோ போங்கல்! போகியோ போகி!!

பண்டிகை யன்று கூட 5 நிமிட நேரம் ஆனந்தமாய் உட்கார்ந்திருக்க எனக்கு ஒழிவில்லை. இந்த டாக்டர் உத்தியோகம் வகித்தாலும் வகித்தேன், சதா வேலைதான். நிம்மதி என்பது ஏதும்மா! நீ நன்றாகத் தெரிந்தவள்; படித்தவள். இருப்பினும் இம்மாதிரி தொந்தரவு செய்யலாமா!

மீன :—என்னுடைய ஆவல் உனக்குத் தெரியுமாடாப்பா! நீயும் என்னைப்போல் மாதா....பிதா....ஸ்தானம் வகித்தால் அப்போதுதான் தெரியும். ஆதி முதல் படிப்பு முடியட்டும் என்றாய். பிறகு வேலையாகட்டும் என்றாய். கடவுள் கிருபையில் தனித்த ஆஸ்பத்திரியும் வைத்து நடத்தும் பாக்கியம் பெற்றுவிட்டாய். வயதோ 30-க்கு ஆகிவிட்டது. இனியும் இப்படிப் பேசினால், நான் என்ன செய்வேன்?

ஆத்ம :—அம்மா! நான் இப்போதும் உனக்கு விரோதமாக ஏதும் சொல்லவில்லையே. சதா நோயாளிகளிடமே ஊடாடும் எனக்குக் கல்யாணத்தைப்பற்றிச் சிந்திக்கக்கூட நேரமில்லை. சதா நோயாளிகளின் கூக்குரலும், அவர்களின் பாதையுந்தான் என் கண் முன்பும், செவியிலும் இருக்கிறது....டெலிபோன் மணி யடிக்கிறது. "ஹல்லோ! என்ன?....டாக்டர்! நேத்து ஆபரேஷன் செய்தீர்களே, அந்தப் பேஷண்டு மிகவும் பாதைப்படுகிறாள். உடனே வந்தால் தேவலை....டெம்பரேசர் என்ன இருக்கிறது.... நேத்துமாதிரியே டாக்டர்....சரி. நேத்து கொடுத்த இஞ்செக்ஷனை கொடு; இதோ வருகிறேன்....அம்மா! பாத்தையா! உன்னிடம் பேசுவதற்காவது எனக்கு அவகாசம் உண்டா பாரு" என்று கூறிக்கொண்டே உடை அணிந்துகொண்டு கிளம்பினான்.

மீண்டும் டெலிபோன் மணி அடித்தது. "ஹல்லோ!.... யாரது?....நான்தான். லேடி டாக்டர்....பிரஸவமாய்விட்டது. ஆனால், மயக்கம் போட்டுவிட்டது. உடனே வரணம். நீங்கள் சொல்லிய மருந்து இஞ்செக்ஷன் செய்திருக்கிறேன்....மயக்கமா.... குழந்தை ஒன்னு, இரண்டா....நீங்கள் சொல்லியபடி இரண்டுதான். இரண்டும் ஆண் குழந்தை....சரி. மூன்றாவது வார்டிலுள்ள பேஷண்டு எப்படி? ராத்திரி தூங்கினாளா!....நன்றாகத் தூங்கினாள்;

இப்போது டெம்பரேசர் குறைந்திருக்கிறது....சரி. இதோ வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே காரில் போய்விட்டான்.

கார் போகும்போது கூட வீதியில் பொங்கல் பண்டிகையின் ஆரவாரத்தைக் கண்டு களித்துக்கொண்டே சென்முன். லோசனியம்மாளும் தன் வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டாள். அன்று அவ்வூரே ஆனந்த மயமாகப் பொங்கியது. ஒருவரை யொருவர் சம்பிரதாய முறைப்படிக்கு "பால் பொங்கிற்று! கல்யாண மாதம் பிறந்ததா! தை பிறந்துவிட்டது. இனி வழி பிறக்கவேண்டும்" என்று குலசப் பிரச்னம் விசாரித்துக்கொண்டார்கள்.

டாக்டர் ஆத்மநாதன் முதலில் டெலிபோன் வந்த இடத்திற்குச் சென்றுன். அவனைக் கண்டதும் நோயாளியின் பெற்றோர்கள் "டாக்டர்! வாருங்கள். எங்கள் வயிற்றில் பாலை வாருங்கள். எங்கள் கவலையைத் தீருங்கள். இரவு முதல் நாங்கள் படும் வேதனை கூறத் திறமன்று. நல்ல போது விடியப்போகிறதா என்று தவித்து விட்டோம்" என்று தங்கள் கவலையைத் திறந்து காட்டுவது போல் கூறினர்கள்.

நோயாளியோ, "டாக்டர்! எப்படியாவது என் பாதை நீங்கினல் போதும்; என்னல் சகிக்கமுடியவில்லை. இன்று நன்றாகத் தூங்கும்படி மருந்து கொடுங்களேன்" என்று அவன் குறையை முறையிட்டான். டாக்டரின் நிலைமை எப்படி இருக்கும். பெற்றோரையும் திருப்திசெய்யவேண்டும். நோயாளியையும் தைரியப்படுத்த வேண்டும்; தனக்கும் நல்ல பெயரைத் தேடிக்கொள்ளவேண்டும்.

இத்தனைக்கும் தன் தைரியத்தைவிடாது உத்ஸாகத்துடன், "ஒன்றுமில்லை. பயப்படாதீர்கள். இந்தமாதிரி ஜுரமும் வியாதியும் இப்போது ஊரெல்லாம் வருகிறது. என் ஆஸ்பத்திரியில் வந்து பார் எத்தனை பேர்கள் இப்படித் தவிக்கிருர்கள். ஏன் சார்! நம்ப வீட்டைத் தேடி வந்துவிட்ட வியாதி நாலு தினங்கள் கூட இல்லாமலா போய்விடும். கவலையே வேண்டாம். ஜாக்கிரதையாக மட்டும் கவனித்து வந்தால் போதும்" என்று பெற்ருேருக்குக் கூறினன்.

நோயாளியைப் பார்த்து "இதென்ன இப்படி பயப்படுகிருயே! உனக்கு அப்படி பிரமாதமான வியாதி ஒன்றுமே இல்லை. உன்

பயமே எல்லாவற்றையும் அதிகப்படுத்தி விடுவதாகத்தான் தோன்று கிறது. ஒன்றுமில்லை. தைரியமாயிரு. இதோ பாரு; 102 தானே இருக்கிறது. இது ஒரு ஜுரமா! மருந்தும் கஞ்சியும் தவறாது குடித்தால் சரியாகிவிடுகிறது. என்ன! நான் வருகிறேன். பயப் படாதே" என்று தட்டிக் கொடுத்து, தைரிய த்வனியில் கூறினான்.

ஆனால், டாக்டரின் இதயத்தில் வேலை செய்யும் எண்ணங்களை யார் அறியமுடியும். "இன்றுவது மருந்து பிடித்து நோய் தீரவேண் டுமே. கடவுளே! என் பெயருக்கு ஹானி வராது காப்பாற்ற வேண்டுமே" என்று வேண்டிக்கொண்டே மருந்தை எழுதுவான்.

வைத்தியர்களின் மருந்துகளைவிட அவர்களின் அன்பும் தைரியமும் கலந்த இனிய வசனமும், தைரியங் கொடுத்துக் கவலை யைப் போக்கி உத்ஸாகத்துடன் நடந்துகொண்டு தட்டிக் கொடுக் கும் மாதிரியுந்தான் பரம அவுடதமாக ஆகிறது. அனேக வைத் தியர்களிடம் மேற்குறித்த அருமையான குணங்களே சமய சஞ்சீவியாக இருக்கின்றன. நல்ல பெயரும் புகழும் தாமே அடைந்து விடுகிறுர்கள்.

அவ்வகையில் ஆத்மநாதன் முதல் பரிசு பெற்றவன். நோயா ளிக்கு இவனுடைய அன்பான தைரிய மொழிகளைக் கேட்கும் போதே நோய் தீர்ந்ததாக ஓர் மனச்சாந்தி ஏற்படும். நோயாளி யைச் சேர்ந்தவர்களுக்கும் நோய் குணமாகிவிட்டது போன்ற ஓர் சந்தோஷமும், நம்பிக்கையும் அவனைப் பார்த்ததே உண்டாகிவிடும்.

ஆத்மநாதன் கையால் தொட்டால்கூட நோய் தீர்ந்து ஆரோக் கியமாகிவிட்டதாக நம்பி அபாரமான மதிப்பு வைத்துள்ள குடும் பங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஜோஸ்யனிடமும், வைத்திய னிடமும் மேற்குறித்த விதமான பெரிய நம்பிக்கையும், மதிப்பும் இருந்தால்தான் கட்டாயம் பலன் கிடைத்தே தீரும்.

அந்த நம்பிக்கை யின்றி இன்று ஒருவர், நாளை யொருவராயும் தாவுகிறவர்களுக்குக் கட்டாயம் பலிதமும் இல்லை, மன நிம்மதியும் இல்லை. எந்த ஒரு வைத்தியரிடமாவது நம்பிக்கை கொண்டால்தான் அவர்களுக்கும் சிரத்தையும் பொருப்பும் ஏற்படும். தமது திறமை பூராவும் காட்டி வைத்தியம் செய்வார். ஒருகால் தங்களால்

முடியாதென்கிற சந்தேகம் தட்டுமாயின் அவர்களே தமக்கு மேலுள்ள பெரிய டாக்டரிடம் அழைத்துச் செல்வார்கள். சரியான படி இருவரும் சேர்ந்து வைத்தியம் செய்தால், பூர்ண குணத்தை அடையலாம்.

நோயாளியைப் பார்க்க வரும் பல பேர்களும் தங்கள் தங்கள் குடும்ப வைத்தியனிடம் காட்டும்படிக்குப் பேசி காபுராவை உண்டாக்கிவிடுவதுண்டு. தங்கள் குடும்ப வைத்தியரென்று நம்புவது போல் மற்றவர்களுக்கும் அவரவர்கள் வைத்தியரிடம் நம்பிக்கை இருக்குமென்று நினைப்பதே இல்லை.

இவர்களின் மன வேதனையில், யார் யார் எவரைச் சொல்கிறார்களோ, அவர்களிடமெல்லாம் சிலர் காட்டுவது வழக்கம். அம்மாதிரி குணமுள்ளவர்களிடம் ஆத்மநாதன் அதிகம் நெருங்கவே மாட்டான். தன்னையே முழு மனத்துடன் நம்பி இருப்பவர்களுக்குத்தான் இரவு, பகல் என்பதைப் பார்க்காமல் பூர்ண திருப்தியுடனும் அக்கரையுடனும் உண்மையாகப் பாடுபடுவான். இத்தகைய அருமையான குணங்களின் மேன்மையினுல்தான் ஆத்மநாதன் இத்தனை சிறு வயதில் இவ்வளவு பிரபலமடைந்துவிட்டான்.

அந்த இடத்தில் மருந்தை எழுதிக்கொடுத்துவிட்டு இன்னொரு இடம் சென்றான். அங்கு நோயாளியைச் சேர்ந்தவர்கள் அதிகமான கவலையால் கண்ணீர் பெருக "டாக்டர்! எங்களுக்கு உயிரை உண்டாக்கவேண்டும். எங்கள் நாடியே விழுந்துவிட்டது" என்று கூறிக் கலங்கினார்கள். நோயாளியும் 'ஐயோ! அம்மா!' வென்று முனகுவதைப் பார்த்த ஆத்மநாதன் நகைத்துக் கொண்டே நோயாளியின் கையைப் பிடித்துப் பார்த்தபடியே,

"இதென்ன அமர்க்களம்! நீங்கள் பண்ணும் காபுராவைப் பார்த்தால், எனக்கும் பயமாகிவிட்டதே. ஒன்றுமே இல்லையே! ஏன் இப்படிக் கவலையுடன் கண்ணீரும் விட்டுக் கலங்கவேண்டும்? நேற்றைவிட இன்று ரொம்ப குணமாய் இருக்கிறது. இதோ பாருங்களேன். கண்களில் எவ்வளவு தெளிவு உண்டாகி இருக்கிறது. என்ன சார்! நேற்றைவிட இன்று கண் எரிச்சல் குறைந்

திருக்கிறதோ இல்லையோ?" என்று தட்டிக் கொடுத்தவாறு அன்புடன் கேட்டான்.

இவனுடைய அருமையான மொழியைக் கேட்கும்போதே நோயாளிக்கும் நோய் குணப்பட்டுவிட்டது போலவே ஒரு தோற்றம் உண்டாகிவிட்டதால் "ஆமாம்; டாக்டர்! கண் எரிச்சலும், தலை பளுவும் கொஞ்சங் குறைந்துதான் இருக்கிறது. ஆனால் தலைவலி குறையவில்லை டாக்டர்!" என்றான்.

ஆத்ம:—பேஷ்! வெரிகுட். தலைபாரம் எப்போது குறைந்து விட்டதோ தலைவலி இன்று குறைந்துவிடும். இது தெரியாதா! பயப்படாதே; பவுடர் அனுப்புகிறேன். அதிகமான தலைவலி இருந்தால் சாப்பிடு; இல்லாவிட்டால் வேண்டாம். இன்று தானாகவே வாங்கிவிடும்—என்று கூறிக்கொண்டே மருந்து எழுதிக் கொடுத்துவிட்டு, "சார்! வீணாகக் கவலைப்படவேண்டாம். ஒன்றுமே பயமில்லை. அப்படி ஏதாவது இருந்தால் நான் சொல்ல மாட்டேனா?" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

இவ்விதமே அயல் இடங்களையும் ஆஸ்பத்திரியையும் பார்த்து விட்டு வீட்டிற்கு வந்தான். மணி சரியாக ஒன்று ஆகிவிட்டது. ஆத்மநாதன் எத்தனைதான் வைத்திய முறையில் தீட்டு, விழுப்பு பார்க்கமுடியாமல் இருந்தாலும், தினந்தோறும் ஸ்நானம் செய்த உடனே கடவுளுக்குப் பூஜை செய்து வேண்டிக்கொள்ளாது சாப்பிடுவது வழக்கமே இல்லை.

தெய்வ பக்தியே அவனுடைய புகழுக்கு ஆணி வேர் என்பதை நன்கு நம்பியவனாகையினால் ஆத்மார்த்தகமாய் ஆனந்தமாய்ப் பாடித் துதிப்பான்.

தன் தொழிலில் எத்தனை ஆர்வம் உண்டோ அத்தனை சங்கீதத்திலும் அவன் ஆர்வமும் ஆவலும் கொண்டிருப்பவன். அவனுடைய தாயார் வெகு நன்றாகப் பாடக்கூடியவளாகையினால் குழந்தை முதல் பாட்டுப் பாடித் தாலாட்டியும், கதை சொல்லியும் தூங்க வைத்து வழக்கமாகிவிட்டதாலும், இயற்கையாக ஞானம் இருப்பதாலும் ஆத்மநாதனுக்குச் சங்கீதமென்றால் உயிர்தான். வாய் சதா ஏதேனும் ஒரு ராகத்தை இழுத்துக்கொண்டே இருக்கும்.

2

## கடவுளிடம் பக்தியும் கல்யாண ஆசையும்

**பொ**ங்கல் பண்டிகையன்று சர்க்கரைப் பொங்கல், கரும்பு மற்ற பலகார வகைகள் எல்லாவற்றையும் ஆனந்தமாய் அலங்கரிக்கப்பட்டிருக்கும் கடவுளின் படத்திற்கு முன்பு வைத்து, "கஸ்தூரி திலகம் லலாடபலகே" என்ற ச்லோகத்தை மீனலோசனியம்மாள் மெய்ம்மறந்து பாடிக்கொண்டிருந்தாள். அவளுடைய கணவனாகிய சிதம்பரநாதன் புஷ்பத்தினாலும், துளஸி தளத்தினாலும் அர்ச்சனை செய்துகொண்டிருந்தார். ஆத்மநாதனும் பூஜையில் கலந்துகொண்டு, தாயாருடன்சேர்ந்து தானும்பாடினான்.

பொங்கல் பூஜை முடிந்ததும், அவனது தாயார் கடவுளை வேண்டித் தொழுது, "என்னப்பனே! ஜகத்ரக்ஷகா! எங்கள் கோரிக்கைகளையெல்லாம் உன் கருணை மாரியினால் நிறைவேற்றிக் கொண்டு வருகிறாய். மக்களுக்கெல்லாம் ஜீவகாருண்யத்துடன் உழைத்து, உயிர்ப்பிக்கும் தொழிலாகிய வைத்தியத் தொழிலில் ஆத்மநாதன் பிரபலமாக விருந்து உதவி புரிய வேண்டுமென்று அவனுடைய சிறு பிராயம் முதல் நான் வேண்டியதற்கு அதைப் பூர்த்தி செய்தாய். அடுத்த பொங்கலுக்குள் அவனுக்கோர் மனைவி யுங்கூட இருந்து, நாங்கள் கண்டு களிக்கும்படியாக அருள்புரிய வேண்டும். கல்யாணத்தில் ஆசையை அவனுக்கு உண்டாக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

இந்த வேண்டுதலைக்கண்டு, நகைத்துக்கொண்டே ஆத்மநாதன் "சர்வலோக சரண்யா! அடுத்த பொங்கலுக்குள் உன் கிருபையினால் எனது சேவை இன்னும் அதிகரிக்கவேண்டும். நல்ல அனுபவமும் அறிவும் பொறுமையும் எனக்கு அளிக்கவேண்டும். பல நோயாளிகளின் பிணியைப் போக்கும் சக்தி அளிக்கவேண்டும்.

கடவுளே! ஆம்; சத்தியமாக நான் வேண்டுவது—என் பிறவியில் நான் எப்போதும்—எந்த நிமிடமும்—பிறருக்கு உபகாரம்

செய்யும் முறையில் உழைத்துக் களிக்கும்படியான சக்தியை எனக்கு அளித்து என்னைக் காக்கவேண்டும். இதுவே எனது முதல் பிரார்த்தனை. எனது பிறவியின் கடமை. எனது தொழிலின் முறைமை. இதற்குப் பஞ்சமின்றி, அருள் செய்தால் போதும்.

என் பெற்றோரின் ஆவலைத் தீர்ப்பதற்கு என் மனத்திற்குப் பிடித்த மங்கையைத் தேடிக் கொடுத்து ரக்ஷித்தால் விவாகமும் செய்துகொள்ளத் தடையில்லை. ஆனால் அது எனது இரண்டாவது காரியந்தான்" என்று வேண்டிக்கொண்டு பகவானை வணங்கிவிட்டு, பின்பு, தன் முன்னறி தெய்வமாகிய பெற்றோரையும் வணங்கினான்.

ஆத்மநாதனுடன் சேர்ந்தாற்போல் சாப்பிடுவதற்கு என்றுமே சாத்தியப்படாது. ஒவ்வொருதினம் அவன் நோயாளிகளைப்பார்த்துவிட்டு வருவதற்கு மிகவும் அகாலமாகிவிட்டால் பகல் சாப்பாட்டை விலக்கவும் நேரும். முக்கியமான விசேஷ தினங்களில் அவனுடன் சேர்ந்து சாப்பிடுவதற்காகப் பெற்றோர்கள் காத்திருப்பார்கள்.

இன்று ஹிந்துக்களின் சகலவிதமான பண்டிகைகளுக்குள் மிகவும் முக்கியமான பொங்கல் பண்டிகையாகையால் மணி ஒன்றானாலும் ஆத்மநாதனுக்காகக் காத்திருந்து பூஜை முடிந்ததும் எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். இலையில் போய் உட்காருவதற்குள் மீண்டும், டெலிபோன் மணி அடித்தது.

குமாஸ்தா இருந்தும், ஆத்மநாதன் எழுந்து ஓடினான். "ஹல்லோ! யாரது? செட்டியாரா? என்ன சமாசாரம்....பிரஸவமா?....சரி....உம்....கவலைப்படாதேயும்....எங்கள் லேடி டாக்டரை அனுப்புகிறேன்....தைரியமாக இரும். பேரனை மடியில் வைத்துக்கொண்டு குலாவலாம்....நல்லது....

ரிஸீவரை வைத்துவிட்டு, மீண்டும் ஆஸ்பத்திரிக்குப் போன் செய்து, லேடி டாக்டரை அங்குப் போகும்படிக் கூறிவிட்டு வந்து இலையில் உட்கார்ந்தான். இரண்டு பிடி சாதம் சாப்பிடுவதற்குள் வீதியில், "சாமீ! சாமீ! டாக்டர்! டாக்டர்! ஆபத்து, ஆபத்து வாங்கோ!....தயவு செய்து சீக்கிரம் வாங்கோ!" என்று தீனமான குரலால் கத்துவது கேட்டு, கையை உதறிவிட்டு எழுந்திருந்து வீதியில் ஓடி வந்து பார்த்தான்.

யாரோ ஒரு ஏழை பாவம்! கரும்புக் கழியும், பூஷணிக்காயும் வாங்கிக்கொண்டு போகையில், திமிர் படைத்த ஒருவன் மோட்டாரை வேகமாக ஓட்டிக்கொண்டு வந்து மேலே ஏற்றிவிட்டுத் திரும்பிக்கூடப் பார்க்காது ஓடிவிட்டான். அடி பட்டவனுக்குப் பிரக்ஞையே இல்லை. ரத்தம் வழிகிறது. அவனைக் கண்ட ஆத்மநாதனுக்குப் பரிதாபகரமாகிவிட்டது. உடனே உள்ளே கொண்டு வந்து காயங்களுக்கு மருந்து போட்டு, கட்டுகட்டி நோயாளியைத் தன் ஆஸ்பத்திரியிலேயே படுத்திருக்கும்படியாக அனுப்பிவிட்டு, உள்ளே வந்தான்.

"இலையில் உட்கார்ந்து சாப்பிடக்கூட நேரமில்லாத பிழைப் பாகிவிட்டதே!" என்று மீனலோசனியம்மாள் வருந்தியபடியே தன் போஜனத்தை முடித்துக்கொண்டு ஆத்மநாதனுக்குப் பலகாரங்களைக் கொடுத்தாள். அவன் அவைகளைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், டெலிபோன் மணி யடித்ததும் லோசனியம்மாளின் முகம் சுருங்கியது. "தம்பீ! எல்லாம் அடிக்கட்டும்; நீ இதையாவது சாப்பிட்டுவிட்டுப் போ!" என்றாள்.

ஆத்ம :—அம்மா! நீ கூடவா இப்படிப் பேசுவது? என் சாப்பாடு முக்கியமா, நோயாளிகளின் அவஸ்தையைப் போக்குவது முக்கியமா! இரு! இரு!—என்று கூறிக்கொண்டே ஓடி ரிஸீவரை எடுத்து, "ஹல்லோ! என்ன சமாசாரம்....என்ன! வலிப்பு வந்துவிட்டதா! இதோ வந்துவிட்டேன்"—என்று கூறி, அவசர அவசரமாய்ப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடினான்.

பலகாரத்தையும் சாப்பிட நேரமில்லாது போய்விட்டதால், மீனலோசனியம்மாளுக்கு மிகுந்த கவலையாகிவிட்டது. சிதம்பரநாதனும் எதிரில் வந்து உட்கார்ந்தார். "பாரு! பாரு! நீதான் பாரு. செவ்வையாகப் பாரு. நான் அப்போதே சொன்னேனே! இந்த டாக்டர் பிழைப்பு அலைச்சலானது. இது வேண்டாமென்று முட்டிக்கொண்டேனே கேட்டயா? 'பரோபகாரம் புண்ணியமான தொழில்; இதுதான் என் மகன் செய்யவேண்டும்.' என்று பிடிவாதம் செய்தாயே. இப்போ பாரு. சாப்பிடக்கூட நேரமில்லை" என்று ஆரம்பித்தார்.

மீன :—ஆமாம். இப்போதுந்தான் சொல்கிறேன். பரோபகாரத்திற்காகப் பாடுபடுவது எத்தனையோ மேன்மைதான். அவனால் எத்தனையோ ஆத்மாக்கள் சந்தோஷப்படுவதைக் கண்டால், நமக்கு உள்ளம் பூரிக்கவில்லையா! அவன் சாப்பிடவில்லையே என்ற அஞ்ஞானத்தினால் நான் சற்றுத் துடுக்காய்ச் சொல்லிவிட்டேன்.

சிதம் :—ஆமாண்டீ! நீ எத்தனைதான் சப்பக்கட்டுக் கட்டி பேசு. நான் என்னமோ ஒப்புக்கொள்ளமாட்டேன். இந்தத் தொழிலால் எத்தனை நன்மையிருப்பதாக நீ நினைக்கிறாயோ, அத்தனை தீமையும் இருக்கிறதை நீ கொஞ்சமும் நினைக்கவில்லையே!

மீன :—தீமை என்ன இருக்கிறது? கைராசி இல்லாத டாக்டர்களின் பொறாமைகளும், துவேஷமுந்தானே சொல்கிறீர்கள்? எந்தத் தொழிலில்தான் தொழில் முறையில் விருத்திக்கு வராதவர்களின் துவேஷம் இல்லை. வக்கீலில் இல்லையா! வியாபாரத்தில் இல்லையா! எழுத்து முறையில் எழுத்தாளர்களிடையே இல்லையா? பத்திரிகைத் தொழிலில்தான் கிடையாதா? காப்பி ஹோட்டலில் இல்லையா! பாவம் தெய்வமேன்னு ஆப்பம் சுட்டு விற்கும் பாட்டிகளுக்கும் போட்டிக் கடைகள் இல்லையா! சோடாக் கடைகளுக்கும், காய்கறிக் கடைகளுக்குமே போட்டியிருக்கையில், மற்றவைகளுக்குக் கேட்க வேண்டுமா? அந்தப் பயல் ஆரோக்கியசாமியின் பொறாமைக்குத்தானே சொல்கிறீர்கள்.

சிதம் :—அடேயப்பா! ஒரு வார்த்தை எடுத்தால் அதைவிட்டு எத்தனை தொழில்களைத் தடதடவென்று கொட்டி அளந்துவிட்டாய்! அவன் பொறாமையைமட்டும் நான் சொல்லவில்லையடீ! புத்தியுள்ளவனைக் கண்டாலே முட்டாள்களுக்கு வயித்தெரிச்சல்தான். அதிர்ஷ்டக்காரனைக் கண்டால் அஷ்டதரித்திரனுக்குப் பொறாமையினால் தேகமே பத்தியெரியும். அது கிடக்கட்டும். அவனுக்கு இத்தனை சிறிய வயதில் இவ்வளவு புகழ் வந்தும் ஏன் கல்யாணம் வேண்டாமென்கிறான். முதலில், அதற்குப் பதில் சொல்லு.

மீன :—பதில் என்ன இருக்கிறது? கல்யாணமென்றால் முன் காலத்தைப்போல் காலில் கட்டிவிட முடியுமா! அவனுக்கு அந்த ஆசையே இல்லை.

சிதம் :—போடீ பைத்தியக்காரீ! ஆசையாவது, பாசமாவது அதன் காரணத்தை நீ அறியவில்லை. ஓயாமல் நர்ஸ்களுடனும் லேடி டாக்டர்களுடனும் பழகும்போது எந்தப் புத்தில் எந்தப் பாம்பிருக்கிறதென்று யார் அறியமுடியும். அதில்தான் எனக்குச் சந்தேகம். இல்லாவிட்டால்,....

மீன :—போதும்! போதும். இப்படி எல்லாம் ஒரு கதை கட்டிவிடாதீர்கள். நெருப்பும் சரி, நம்ப ஆத்மனும் சரி. இதைப் பெற்ற பிதாவாகிய நீங்களே அறியாது பேசினால், வீண் பழியை நீங்களே தேடி வைப்பதுபோலல்லவா ஆகும். அவனிடத்தில் எனக்குச் சந்தேகமென்பதே கிடையாது.

சிதம் :—கிடையாது! உனக்கு எப்படி இருக்கும்? உலகத்தை நீ என்ன கண்டாய்?....நல்ல யுக்த வயது வாலிபனும், யுக்த வயது மங்கையரும் ஓரிடத்தில் வேலை செய்வது காற்றும் நெருப்பும் போன்றல்லவா! எத்தனையோ ஆஸ்பத்திரிகளில் நர்ஸுகளும், லேடி டாக்டர்களும், அங்குள்ள டாக்டருடன் சம்பந்தப்பட்டுக் கிடப்பதை நாம் கேள்விப்படவில்லையா! எத்தனை நர்ஸ்கள் டாக்டர்களைச் சந்தியில் இழுத்துவிடவில்லை?

மீன :—உங்களுக்கு ஏன் இந்த விபரீத எண்ணம் உண்டாகிறது? நாட்டில் நாலாயிரம் பேர் நல்லவர்களும் இருப்பார்கள்; கெட்டவர்களும் இருப்பார்கள். எத்தனையோ டாக்டர்கள் மஹா உத்தமர்களாயும், சத்திய சீலர்களாயும் இருப்பதைப் பார்க்கிறோமே! அதைச் சொல்லுங்களேன். ஆத்மநாதனின் காலில் ஒட்டிய தூசிகூட நீங்கள் சொல்வதுபோல் நடக்காது. உலகத்தில் எத்தனையோ கெட்டுப்போனவர்கள் இருக்கலாம். எத்தனையோ டாக்டர்கள் தங்களிடம் வரும் அழகிய பெண்களாகிய நோயாளிகளையே கெடுத்துக் குட்டிச்சுவராக்கிப் பாழாய்ப் போகிறார்கள் என்றும் கேள்விப்படுகிறோம். அவைகளை ஏன் நாம் நினைக்கவேண்டும். அது அவரவர்களின் கர்மா.

சிதம் :—ஏதேது? பெரிய வேதாந்தசாகரத்தில் இறங்கிப் பேசுகிறாயே. மனத்தில் எப்போதும் கெடுதல் தோன்றியபின்தான் நல்லது தோன்றும். உலகத்தில் இத்தகைய அநியாயங்கள் நடப்பதைப்

பார்க்கும்போது, ஆத்மனிடத்திலும் எனக்குப் பயமாகத்தான் இருக்கிறது. அவன் மட்டும் என்ன ஜிதேந்திரியனா? சின்ன பையன் தானே! எத்தனையோ நோயாளிப் பெண்கள் டாக்டர் களிடமே ஐக்கியமாகிவிட்ட கதையை நேற்று நம்ப ராமநாதன் சொல்லியதை மறந்துவிட்டாயா? நோய் இல்லாதபோதும் நோய் இருப்பதாகக் கூறி, தினம் டாக்டர் வீட்டுக்கு வருவதும் அல்லது ஆஸ்பத்திரியிலேயே படுப்பதுமாக ஆகிவிட்டார்களாமே! இதைக் கேட்க எனக்கு மிகவும் பயமாகவே இருக்கிறது.

மீனா :—வீணாக காபுராவைக் கிளறிவிட்டு வேதனைப்படவேண் டாம். இனிமேல் என்னவிதமாக ஆகுமோ தெரியாது. இந்த நிமிடம் வரையில் ஆத்மநாதன் நெருப்புப் போலவே இருக்கிறான் என்பதை என் இதயம் நம்புகிறது. நீங்களும் அப்படியே இருங்கள். இந்தச் சந்தேகமெல்லாம் அவன் காதில் பட்டால் வீணாக மன வருத்தம் உண்டாகும்....

என்று கூறும்போது, வசீகரம் ததும்பும் முகத் தோற்றத் துடன் கூடிய ஒரு பெண்மணி அங்கு வந்து, "டாக்டர் எங்கே!" என்றாள். 'அவர் வெளியில் போயிருக்கிறார்' என்று கூறியதும் உடனே அவள் போய்விட்டாள்.

அவள் சென்றதும் சிதம்பரநாதன் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு, "அடீ! பார்த்தையா! வந்தவள் லேடி டாக்டர் தெரியுமா! எத்தனை சின்ன வயது. என்ன அழகு. என்ன புன்சிரிப்பு. இப் படிப்பட்டவர்களை யெல்லாம் பார்த்துவிட்டு எவன்தாண்டீ....

மீனா :—ஐயோ, ராமா! போரும்! வாயை மூடுங்கள். மன உறுதியும், ஆத்ம சக்தியும் வலுவாக இருந்தால், இந்த அற்ப அழ கெல்லாம் அதன் எதிரில் என்ன செய்ய முடியும்? உறுதியற்றவர் களுக் கல்லவோ அந்த வார்த்தை.... அதோ கார் ஓசை கேட்கிறது; ஆத்மநாதன் வந்துவிட்டான். நீங்கள் பேசாமல் எழுந்துபோய் விடுங்கள்—என்றாள்.

3

## அஞ்சா நெஞ்சம்—அனுதை நிலையம்

"அடாடாடா! இந்த அநியாயங்கூட உலகத்தில் நடக்குமா? ஐயோ! இப்பதான் பிறந்த பச்சைக் குழந்தை; மகா பாவி, சண்டாளி, இப்படியா திருட்டுப்பிள்ளை பெற்றுவிட்டு, துணியில் சுற்றிக் குப்பைத்தொட்டியில் போடுவது?" என்று ஒரு வேலைக்காரி, கையில் குப்பை முறத்துடன் 'லபோ திபோ' என்று அடித்துக்கொண்டாள்.

ஒரு க்ஷண நேரத்திற்குள் கூட்டம் கூடிவிட்டது. "என்ன! என்ன! குப்பைத்தொட்டியில் குழந்தையா! குழந்தையா?"....என்று ஒருவரை யொருவர் கேட்டுக்கொண்டே குப்பைத்தொட்டியை எட்டிப்பார்க்க முட்டித் தள்ளிக்கொண்டு வந்தார்கள். அதற்குள் சிலர், "ஐயோ! குழந்தைக்கு உயிர் இருப்பதுபோலிருக்கிறதே! உடனே வெளியே எடுக்கக்கூடாதா! துணியுடன் நெளிகின்றதே!" என்றனர்.

பேச்சளவில் எல்லோரும் சொல்லுகிறார்களேயன்றி, அதைத் தைரியமாக எடுப்பதற்கு ஆண்களும் பயப்பட்டனர்; பெண்களும் பயப்பட்டனர். "எந்தச் சண்டாளி செய்த காரியமோ! எந்தப் படு பாவி கொலைகாரி செய்த வேலையோ! அவளைத் தீயிலிட்டுப் பொசுக்கலாம்.... அவளைக் கண்ட துண்டமாக வெட்டலாம். அவளைச் சுண்ணும்புக் காளவாயில் போட்டு வேக வைக்கலாம்.... அவளைக் கழுவில் ஏத்தலாம்....மென்னியைத் திருகலாம்....மூக்கை யறுக்கலாம்.... மண்டையை உடைக்கலாம்....

அப்பப்பா! கணக்கு வழக்கில்லாத மேற்படி வார்த்தைகளை ஜனங்கள் தம் தம் ஆத்திர த்வனியில் வர்ஷித்தார்கள். ஒரே கூச்சல், ஒரே கலாட்டா! இதற்குள் குப்பைத் தொட்டியில் குப்பை அள்ளும் ஆளும் குப்பை லாரியுடன் வந்துவிட்டான். குப்பையள்ளும் தோட்டியும் அக்குழந்தையை எடுக்கப் பயந்தான். அவனும் அச்சிசுவின் தாயாருக்கு வசை மலரால் லக்ஷார்ச்சனை செய்தான்.

அச்சமயம், பிரதிதினமும் காலையில் பகவான்மீது பாடல்களைப் பாடிக்கொண்டே அனாதைநிலயத்தின் குழந்தைகளைக் கால் நடையாக ஊரைச் சுற்றிக்கொண்டு கோவிலின் முன்பு வணங்கிவிட்டுப் போகும் வழக்கப்படி சுமார் 50 பசங்களை வரிசையாக அழைத்துக் கொண்டு, அதன் நிர்வாகத் தலைவி வந்துகொண்டிருக்கையில், இங்குள்ள கும்பலைக்கண்டு நின்றுவிட்டார்கள்.

குழந்தைகளை ஓரமாக நிறுத்திவிட்டுத் தலைவி வெகு விரைவில் கூட்டத்தைக் கலைத்துக்கொண்டு அங்கு வந்து விஷயத்தை யறிந்ததும், தைரியமாக அந்தக் குப்பைத்தொட்டியிலிருந்து குழந்தையை எடுத்தாள். கூட வந்திருந்தவள் அக்கம் பக்கத்திலிருந்து வெந்நீர் ஜலம் கொண்டுவந்தாள்.

தலைவி, போலீஸுக்குத் தகவல் அனுப்பிவிட்டு, அந்தக் குழந்தையை எடுத்துக் கழுவினாள். குழந்தை ஸ்வர்ண விக்ரகம்போன்ற ஆண் குழந்தையாக இருப்பதைக் கண்டதும், "ஐயோ! ஆண் குழந்தையா!" என்று சிலர் வாய்விட்டுக் கூறி ச்ச்சு கொட்டினார்கள்.

இதற்குள் போலீஸாரும் வந்துவிட்டார்கள். அச்சமயம் காரில் போகும் ஆத்மநாதன் இக்கூட்டத்தைக்கண்டு இங்கு ஏதோ பெரிய விபத்து நடந்து விட்டதாக எண்ணிக் காரை நிறுத்திவிட்டு இறங்கி வந்து விசாரிக்கையில், விஷயம் இன்னதென்பதை அறிந்ததும் மனம் வருந்தியவாறு, "உம். ஆஸ்பத்திரிகளில் வந்து பெற்று போட்டுவிட்டுப் போவோர்களைப் பார்த்து, நான் ஐயோ பாவமே என்று வருந்துவது உண்டு. இந்தக் கண்றாவியைச் சகிக்கமுடியவில்லையே? என்ன அக்கிரமம்! என்ன நெஞ்சு துணிச்சல்! மனத்தைத் தளரவிட்டுக் கெட்டுப்போவதற்குத் தைரியமும் நெஞ்சுறுதியும் இருக்கையில், இந்தச் சிசுவை வைத்து வளர்ப்பதற்குத்தானா தைரியமில்லை. அக்கிரமக்காரி" என்று திட்டிக்கொண்டே தான் அக் குழந்தையை வாங்கிக்கொண்டான்.

துணியில் மூடிவைத்திருந்ததால் மூச்சுத் திணறி, அவஸ்தைப் படுவதை மெல்ல ஆட்டியும், தலைகீழாகக்குலுக்கியும், மூக்கில் குழாய் வைத்து ஊதியும் முதல் சிகிச்சைகள் செய்த பிறகு குழந்தை கிரீச் என்று அழ ஆரம்பித்தது. அதன் தாயாரைத் திட்டாத ஜனமும்

குழந்தைக்கு அனுதாபங் கட்டாத ஜனமும், ஆத்மநாதனைப் போற்றாதவர்களும் அக் கூட்டத்திலில்லை எனலாம்.

போலீஸாரின் உதவியுடன் குழந்தையை அனாதை நிலையத் தலைவியிடம் கொடுத்துவிட்டு "நான் வருகிறேன்" என்று கூறி விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான். ஆசிரமத்தலைவி குழந்தையுடன் முதலில் ஆச்ரமத்திற்குப் போனாள். மற்றவர்கள் வழக்கப்படி ஊர்வலத்துடன் சென்றார்கள். தலைவி குழந்தையை ஜாக்கிரதையாகக் கவனிக்க ஆரம்பித்தாள்.

ஆச்ரமத்துப் போஷகர்களில் ஒருவர் வழக்கம் போல் ஆச்ரமத்தைப் பார்வையிட வந்தார். அவருக்கு அன்று கிடைத்த புதிய குழந்தையைத் தலைவி காட்டி அது கிடைத்த விவரத்தைக் கூறினாள்.

போஷகர் :—சென்ற சில மாதங்களாக இப்படிப்பட்ட அக்ரமம் அடிக்கடி நடந்துவருகின்றது. நேற்று ஒரு குழந்தையை மென்னியைத் திருகிக் கொன்றுவிட்டு கடற்கரையோரத்தில் மூட்டைகட்டி போட்டுக்கிடந்தது. காக்காயும் கழுகும் சுற்றி வட்டமிட்டுக் குத்தியதைக் கண்டு சகிக்க முடியவில்லை. மகா பாவிகளுக்கு எப்படித்தான் மனம் வருகிறதோ !

தலைவி:—சென்ற வாரம் நாங்கள் காலையில் ஊர்வலம் சென்றபோது இப்படித்தான் ஒரு குழந்தையைக் கொன்று வீதி சாக்கடையில் அடைத்திருந்த கண்றாவியைக் கண்ணால் கண்டேன். அதற்கு முன்பு ஒரு தினம் குழந்தையின் தொப்புள் கூட அறுக்காமல் குப்பைத் தொட்டியில் கொன்று போட்டிருந்தது. பெத்த பாவிகள் ஏற்கெனவே செய்துள்ள பாபத்திற்குத் துணையாகக் கொலையும் செய்யத் துணிவதைவிடத் தாமே கடலில் விழுந்து சாகலாமே என்று மனந் தவித்தது. அந்த பாதகிகளைப் போலில்லாது இந்த மகாராஜி குழந்தையை உயிருடனாவது வைத்தாளே, அதுவே போதும்.

போஷ :—அத்தகைய கொடும்பாவியை மகாராஜி என்று கூடவா சொல்லவேண்டும்? தான் முதல் குற்றம் செய்வதற்கு முன்பு இந்த ஞானமும் மான அவமானமும் எங்கே போய் விட்டது? அப்பொழுது யோசிக்காமல் கண்மூடித்தனமாய்ப்

பெரிய குற்றத்தைச் செய்யத் துணிந்த மகா பாவிக்குப் பெற்ற பிறகுதான் மானமும், யோக்யதையும் வந்துவிடுகிறதா! அத்தகைய வர்களை செக்கில் வைத்து ஆட்டினாலும் தீராது.

அப்போது இன்னொரு போஷகர் அங்கு வந்தார். அவரும் இந்த சம்பாஷணையில் கலந்துகொண்டு "என் சார்! அவர்களை மட்டும் செக்கில் வைத்து ஆட்டினால் போதாது. அவர்களைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கும் தடியன்களையும், அத்தகைய மகா கொடும் பாவிகளுக்குக் கர்ப்பச்சிதைவுக்காகவும், கர்ப்பம் வரா திருப்பதற்காகவும் உதவி செய்யும் சில டாக்டர்கள்—ஏன், லேடி டாக்டர்கள் கூட—இருக்கிறார்களே, அவர்களையும் முதலில் தண் டிக்க வேண்டும். பணத்திற்காக எத்தகையதீமையையும் செய்யத் தயாரா யிருக்கிறார்களே அவர்கள் ஓர் மனிதர்களா? அவர்களும் டாக்டர்களா! என்ன வெட்கக்கேடான பிழைப்பு!' என்றார்.

முதல் போஷகர் :—கைராசியாவது இருக்கவேண்டும் அல்லது சாமர்த்தியமும், ஜாலக்கும், தட்டிக்கொடுத்துப்பேசும் உயரிய குண முமாவது இருக்கவேண்டும். இவ்விரண்டும் இல்லாத டாக்டர் களுக்கு பிழைப்பு எப்படி சார்! அவர்களும் பெரிய குடும்பத்தைக் காப்பாற்றித்தாமும் பிழைக்கவேண்டாமா! அத்தகையவர்கள் தான் இம்மாதிரி அக்கிரமத்திற்கு உடந்தையாக இருந்து நாய் வயிறு வளர்ப்பதுபோல் வளர்க்கிறார்கள். அது மட்டுமா! நோயே இல்லாதவனுக்கு மகத்தான நோய் என்று சர்டிபிகேட் எழுதித் தருவது, அதில் பணமடிப்பது. பொய் சாக்ஷி சொல்வது, அதில் பண மடிப்பது. சில விதவைகளின் ஊழலை யறிந்து அதைக் கொண்டே அவர்களை மிரட்டிப் பணம் பறிப்பது. இம்மாதிரி இன்னும் எத்தனையோ அக்ரமங்கள். அதெல்லாம் அவர்களுடைய குத்தகைதான்.

இரண்டாம் போஷகர்:—ஆமாம். ஊழலைச் சொல்லவே வேண் டாம். சில டாக்டர்களிடம் அகப்பட்டுக் கொண்ட நோயாளிகள் படும் அவஸ்தை போதும். ஆபரேஷனுக்குத் தயார் செய்து கத்தியை வைக்கும் சமயம், "இன்னும் 50 ரூபாய் கொடுத்தால்தான் செய் வேன்" என்று கூறும் கிராதகர்களும் இருக்கிறார்கள். தருமத்திற்கு

உழைக்கும் எத்தனையோ உத்தமர்களும், நெறிதவறாது தொழில் செய்யும் பரமயோக்யர்களும் இருக்கிறார்கள். அவர்களை ஜனங்கள் கொண்டாடுகிறார்கள்; மற்றவர்களைக் கொண்டாடுகிறார்களா?

மு. போ:—உலகத்தில் எல்லாந்தான் கலந்திருக்கிறது. நல்ல யோக்யனும் தயாளகுணத்துடனும் இருந்து உழைத்த பல பெரிய டாக்டர்களை உலகம் இழந்தபின்னரும் மறக்கமுடிகின்றதா பாரும். இன்னும் அவர்களை நினைத்துத்தான் ஜனங்கள் ஏங்குகின்றார்கள். கலியுக தன்வந்திரி மறைந்து விட்டாரே என்று கலங்குகிறார்கள். தற்காலம் உள்ள வைத்தியர்களில் சிலர்தான் பழய பெரிய வைத்தியர்களின் பெயரை நிலை நாட்டும் வகையில் இருக்கிறார்கள். அதில் ஆத்மநாதனையும் தாராளமாகச் சேர்க்கலாம். வெகு நல்ல குணம், தயாளசிந்தை. ஏழைகளிடம் இரக்கம் பச்சாத்தாபம் கொண்டவர்.

இ. போ:—ஆமாம். சமீபத்தில் கூட ஒரு சம்பவம் நடந்தது. ஒரு ஏழையின் வீட்டில் திடீரென்று பேராபத்து நேர்ந்துவிட்டது. அவர்கள் டாக்டர் கருணாகரனைப்போய்க் கூப்பிட்டதில், "பீஸ் கொடுக்க சக்தியற்றவர்கள் பெரிய டாக்டரை அழைப்பது சரியில்லை. எனக்கு ஒரு விஸிட்டுக்கு 15 ரூபாய் கொடுக்கவேண்டும். எத்தனையோ தர்ம ஆஸ்பத்திரி இருக்கிறது; அதற்குப் போங்கள்" என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார்.

ஆஸ்பத்திரிக்குப் போகும் நிலைமையில் நோயாளி இல்லாததால் அலைந்துபோய் ஆத்மநாதனிடம் ஓடினார்கள். அப்போது நள்ளிருள் 12 மணி இருக்கும். அந்த நிசியில் சற்றும் கர்வமின்றி ஓடிவந்து பார்த்தாராம். காலணா வாங்காது மருந்து கொடுத்தாராம். அந்த ஏழைகள் அவரைக் கொண்டாடி மாளவில்லை—என்று பேசிக்கொண்டிருக்கையில். காலைப்ப்ரார்த்தனை முடிந்து அத்தனை சிறுமிகளும் வந்து சேர்ந்தார்கள். இவர்களின் சம்பாஷணையும் முடிந்தது. அவர்களுக்கு வழக்கப்படிக்கு காலை ஆகாரங்களைக் கொடுத்து அவரவர்களுக்குத் தக்கபடி பாடங்கள் படிக்கவும், தொழில்கள் செய்யவும் அனுப்பிவிட்டார்கள்.

ஆச்ரமத்தின் தலைவி, அங்குள்ள சின்ன குழந்தைகள் எல்லாம் தொட்டிலில் கிடத்தப்பட்டிருந்ததை ஒரு முறை பார்த்துக்

கொண்டே வந்தாள். "உம், எதெது எங்தெந்த ஜாதியோ! எந்த குலமோ! யார் பெற்றதோ? தாய் யாரோ! தகப்பன் யாரோ? தற் போது சகலமும் இந்த அனுதை நிலையமாகவே இவைகளுக்கு ஆகி விட்டது. இத்தகைய அனுதைகளுடன் காலத்தைக் கடத்தியே ஜீவியமும் முடியவேண்டுமென்ற தலைவிதியுடன் வரன் பெற்றுக் கொண்டு வந்துவிட்டோம். உம். எங்தெந்த கர்மாவை யார் யார் அனுபவிக்கவேண்டுமோ அதை அனுபவித்துத்தானே ஆகவேண் டும்" என்று மனத்திற்குள் எண்ணிப் பெருமூச்சு விட்டாள்.

## 4

## திருமண மறுப்பு—திருவுள்ள வெறுப்பு

சிதம்பரநாதனுக்கு ஒரே ஒரு அருமைத் தங்கையாகிய லஷ்மியின் இடத்தில் அத்யந்த பாசம். அவளுக்கு என்றுமே மனங் கோணுமலும் வெகுப் பிரீதியுடனும் சகல விதத்திலும் நடத்தி வரு கிருர். லக்ஷ்மிக்கு நான்கு குழந்தைகள் பிறந்தபின்னரும் அவளை அருமையாய்ப் பாப்பா என்றே கூப்பிடுவது வழக்கம்.

லக்ஷ்மியின் எல்லாக் குழந்தைகளையும்விட வசுந்தரா என்கிற பெண்ணிடத்தில்தான் சிதம்பரநாதனுக்கு அதிக பிரீதி. அவள் மகா புத்திசாலி; வெகு கெட்டிக்காரி. சாமர்த்தியமாகப் பேசி மகிழச் செய்வதில் குழந்தை முதல் தேர்ந்தவள். ஆகையால் அவளி டம் அலாதியான பிரீதி யிருப்பதோடு அவளையே தன் நாட்டுப் பெண்ணுக அடையவேண்டுமென்கிற ஆசை அவருக்கும் அதிகம். லக்ஷ்மிக்கும் வெகு வெகு இஷ்டம்.

ஆத்மநாதன் சிறு குழந்தையாயிருக்கும்போதே அவனைத் தன் மருமகனுகவே லக்ஷ்மி எண்ணிவிட்டாள். ஆகையால் அந்த முறை யில் தனித்த அன்புடன் நோக்கினுள். ஆத்மநாதன் சிறுவயதுமுதல் தனக்குக் கூடப்பிறந்தவர்கள் யாருமில்லையாதலால் விளையாட்டுத் தோழியாகவே வசுந்தராவிடம் அசாத்ய பிரீதியுடன் விளையாடி வந்தான்.

ஆத்மநாதன் என்ன சாப்பிடுகிருனே, எங்கு தூங்குகிருனே, எங்கு போகிருனே அப்படியெல்லாம் தானும் செய்தால்தான், வசுந்தராவின் மனம் நிம்மதியாகும். இல்லாவிட்டால் பிடிவாதம் செய்து அழுது புரண்டு ஆகாத்தியம் செய்வாள். புத்தியறிந்த பிறகும் ஆத்மநாதனைப்போல் தானும் டாக்டருக்கே படித்து அவனுடன் கூடத் தொழில் முறையிலும் உழைத்துப் பயனடையவேண்டுமென்கிற நோக்கங்கொண்டு, தன் பெற்ருேரிடம் பிடிவாதம் செய்து அதே முறையில் படிக்க வாரம்பித்து, பாஸ் செய்துவிட்டாள்.

ஆனல், அவள் இப்போது வயது வந்த பெரியவளாயும் படித்தவளாயும் ஆகிவிட்டபிறகு முன்போல் ஆத்மநாதனுடன் சண்டையிடுவதும், பிடிவாதம் செய்வதும் அடியோடு நின்றுவிட்டது. ஆத்மநாதனின் ஆஸ்பத்திரியிலேயே அவளும் ஓர் லேடி டாக்டர் வேலையில்தான் இருக்கிருள். தொழில்முறையில் வெகு மரியாதையாயும், கௌரவமாயும், புத்திசாலித்தனமாயும் நடந்து கொண்டு வருவதைக் காண ஆத்மநாதனுக்கும் பரமசந்தோஷம்.

தங்களுடைய பால்ய சிநேகத்தின் சேஷ்டையோ, புதியகாதல் சம்பாஷணைகளோ, உலகப் பேச்சோ இருவரும் எடுப்பதே இல்லை. நாட்களும் ஓடிக்கொண்டே யிருக்கின்றன.

ஒருநாள் ஆத்மநாதன் ஓர் பெரிய ஆபரேஷன் கேஸில் மிகவும் சிரமப்பட்டுவிட்டு, அப்பாடாவென்று வீட்டிற்கு வந்து சோபாவில் படுத்து, மீண்டும் எங்கிருந்து அழைப்பு வந்துவிடுமோ என்று பயந்து கொண்டே இருந்தான். சிதம்பரநாதன் வந்து அருகில் உட்கார்ந்து "ஏண்டாப்பா! அத்தை வீட்டுக்குப் போனுயோ! அத்தையின் உடம்பு எப்படி இருக்கிறது? உயிருக்கு ஹானி வராதிருந்தால் போதும். அவள் மிகவும் பயப்படுகிருளே!" என்று வார்த்தையை ஆரம்பித்தார்.

ஆத்ம:—நோயாளிகள் பயப்படுவது சகஜந்தானே. ஆனல், அத்தைக்கு என்னமோ அப்படிப்பட்ட பயம் எதுவுமே இல்லை. நேற்று ராத்திரி கூடப் பார்த்துவிட்டு வந்தேன். ஜீரணப்பை சரியில்லாததால், வயிற்றில் கோளாறே யன்றி, அவள் பயப்படுவது போல் எதுவுமில்லை. ஹார்ட், லங்க்ஸ் எல்லாம் க்ளியரா யிருக்கு.

எப்பா! நான் ஒரு வேளை ஒளித்துச் சொல்கிறேனோ என்று சந்தே கப்பட்டால், வஸுந்தராவையே கேளுங்களேன்.

சிதம் :—சந்தேகப்படுவது ஒன்றுமில்லையப்பா! அத்தையின் பயத்தினாலும், மன வேதனையினாலும் அவள் படும் அவஸ்தையைப் பார்த்தால் பயமாக விருக்கிறது. நீ மருந்து கொடுத்து அவள் வியாதியைக் குணப்படுத்துவதைவிட உன் கையிலுள்ள....

ஆத்ம :—(இடை மறுத்து) என்னப்பா இது. நீங்கள் படிக்கும் பாடத்தையே திரும்பவும் ஆரம்பித்து விட்டீர்கள். எத்தனை தரம் நான் சொன்னாலும் ஒரே வார்த்தைதான் சொல்கிறேன். ஆதி முதல், குழந்தைப்பருவம் முதல், அவளை நான் என்னுருயிர்ச் சகோ தரியைப்போலவே எண்ணி அன்பு செலுத்திவிட்டேன். அத்தகைய சகோதரியை நான் எப்படியப்பா மணப்பது? எனக்கோர் செல்வத் தங்கை இல்லாத குறையை நிவர்த்தித்து இன்றும், என்றும் என் தங்கையைப் போலுள்ள அவளை நான் கனவிலும் மனைவியாக எண்ணமாட்டேன். அப்படி நினைப்பதும் பாதகமல்லவா?

சிதம் :—போடா, பயித்தியக்காரா! பாதகத்தையும் சாதகத் தையும் நீ தான் கண்டாய். அத்தைமகளை மாமன் மகன் மணப்பது ஜாதி முறைமையல்லவா? ஆதிமுதல் பழகியதனால் இன்னும் சந் தேகமின்றி வெகு இன்பமாக மணந்து சந்தோஷமா யிருக்கலாம். அத்தையின் மனத்தில் அந்த ஒரே குறைதானே வேதனைப்படுத்து கிறது. வஸுந்தரா என்ன அழகில்லாதவளா, அறிவில்லாதவளா! உனக்காக வேண்டி அவளும் பிடிவாதமாக டாக்டருக்குப்படித்துத் தொழில் செய்யவில்லையா? கெட்டிக்காரியில்லையா! எந்த விதத்தில் அவளுக்கு என்ன குறையிருக்கிறது?

ஆத்ம :—அப்பா! உங்கள் போக்கிலேயே நீங்கள் பேசிக் கொண்டு போனால், நான் என்ன பதில் சொல்வது! பெற்ற தாயா ரையும் பிறந்த சகோதரிகளையும் எந்தச் சண்டாளன்தான் பெண் டாக நினைக்கமுடியும்? நான் அதிகமாகப் பேசினால் நீங்கள் அதிகப்பிரஸங்கி என்பீர்கள். உங்களுக்கு அத்தையிடத்திலுள்ள பாசத்தை அம்மாவிடம் திருப்ப முடியுமா? அப்படியே எனக்கு வஸுந்தரா என் ஆத்ம சகோதரியாக விளங்குகிறாளே யன்றி,

வேறு எந்த விதத்திலும் கல்மஷம் உண்டாகவில்லை. அவள் தொழிலுக்கு என்ன குறைவு? அவளும் நானும் என்றும் தொழிலில் விருத்தியே பெற்று வருவோம். அவள் எழிலுக்குத் தக்க வரனை நானே தேடி, என் சகோதரியின் கல்யாணத்தை என் செலவிலேயே செய்து முடிக்கிறேன்—என்றான். அப்போது மீனலோசனி அங்கே வந்து "தம்பி! நீ பிடிவாதம் செய்தால் அதை மாற்றவே முடியாதா! வஸுந்தரா உன்னையே மணக்க வேண்டுமென்றல்லவோ இரவு பகல் தவம் செய்கிறாளாம். நான் திடீரென்று அவள் அறைக்குச் சென்றேன். அவள், உன் படத்தையும் தன் படத்தையும் சேர்த்துத் தன் பெட்டியில் வைத்துக்கொண்டிருப்பதைத் தற்செயலாகப் பார்த்து விட்டேன். அதை உடனே மூடி மறைத்து விட்டாள். அவள் அத்தனை பிரியமாயிருக்கையில் நீ மட்டும்....

ஆத்ம:—அம்மா! நான் சிள்ளென்று பேசினால் மட்டும் கோபித்துக் கொள்ளுகிறீர்கள். கல்யாணமென்பது அவரவர்களின் இஷ்டமேயன்றி ஒருவருக்காகச் செய்துகொண்டு அவஸ்தைப் படுவது முடியாது. நீங்கள் இருவரும் எத்தனைதான் சொன்னாலும் எனது வஸுந்தரா என் ஆத்ம சகோதரிதான். அதை மாற்றுவது இப் பிறவியிலில்லை. அத்தை என்னைக் கேட்டால் நான் இதையே தான் சொல்லப்போகிறேன். எனக்குள்ள அலைச்சலில் சற்று நேரம் பத்திரிகை படித்து நிம்மதியாக விருக்கலாமென்றால், ஏதோ தொந்தரவுசெய்கிறீர்களே! பேசாதிருங்கள்—என்று சற்றுக்கடுமையான குரலிலேயே கூறிக்கொண்டு எழுந்து போய்விட்டான்.

அதற்குமேல் அவர்கள் என்னதான் செய்ய முடியும்? 'தோளுக்கு மிஞ்சினால் தோழன்' என்ற பழமொழி இவர்களுக்கு மட்டும் மாறிவிடுமா! "இப்படி பிடிவாதம் செய்தால் என்னதான் செய்வது? என் தம்பியின் மகளை விவாகம் செய்வதற்காக நான் வஸுந்தராவை மணக்க வேண்டாமென்று சொல்வதாய், அக்கா நினைக்கிறார்கள். ஜாடையாகப் பேசவும் பேசிவிட்டார்கள். நான் என்ன செய்வேன்?" என்று பெண்களின் இயற்கையான சுபாவப் படிக்கு மீனலோசனியம்மாள் மூக்கைச் சிந்தினாள்.

சிதம்:—சரி; நீ பொருத்தி மூக்கைச் சிந்திப்போட்டுக் கொண்டே இருந்தால், காரியம் ஆகுமா! நான் சொன்னால் கோபம்

வருகிறதே ! இப்போது என்ன சொல்கிறாய் ? அத்தனை பழக்கமான குழந்தை வஸுந்தராவையே அவன் வேண்டாமென்கிறபோது சந்தேகம் உண்டாகிறதா இல்லையா பாரு. எந்த லேடி டாக்டர் வலையிலோ, நர்ஸ் வலையிலோ அவன் விழுந்திருப்பாண்டீ ! இல்லாவிட்டால், ஏன் இப்படி பிடிவாதம் செய்யவேண்டும்.

மீன:—ஆமாம். ஆம்; ஊம் என்றால் உங்களுக்கு இந்த ஒரு வார்த்தைதான் சொல்லத் தெரியும். தினம் இப்படியே நீங்கள் சொல்லிக்கொண்டிருந்தால், அது தப்பித் தவறி பையன் காதில் கேட்டுவிட்டால், விபரீதமாகிவிடும். ஞாபகமிருக்கட்டும். வீணாக அவன் மனத்தைப் புண்படச் செய்யவேண்டாம். ஒரு நிமிடம் ஓய்ச்சல் ஒழிவில்லாதிருக்கையில் நீங்களும் வதைக்கவேண்டாம். அவனுக்கா இஷ்டம் பிறந்து கல்யாணம் செய்து கொள்வதாக எப்போது சொல்கிறானோ அப்போது செய்துகொள்ளட்டும். இனிமேல் தொண தொண வென்று கல்யாணத்தைப் பற்றிப் பேச வேண்டாம்.

சிதம்:—உன்னைப்போல ஒரு தாயார் இருந்தால், மக்கள் உருப்பட்டுப் போவார்கள். அவனுக்கா எண்ணம் உதிக்கவேண்டுமா ? ஆமாம். காலம் கலியோன்னோ ! காதல் கல்யாணந்தான் சிலாக்கியம். எந்த பறச்சியோ, கிருஸ்தவச்சியோ, எந்த மூதேவியை யாவது காதல் கொண்டுவிட்டு இவளைத்தான் செய்து கொள்வேன் இல்லாவிட்டால் சாவேன் என்றால் சரியாகிவிட்டது. அதுதான், பாக்கி. அப்பவே வக்கீல் தொழிலுக்குப் போயிருந்தால், இம்மாதிரி ஆபத்தெல்லாம் இல்லை யல்லவா ?

மீன:—உங்க மூளை வெகு அழகாகத்தான் வேலை செய்கிறது. வக்கீல் தொழிலில் மட்டும் ஏன் ஆபத்தில்லை. உங்களைப் போல் கண்டதற்கெல்லாம் சந்தேகப்படும் பிராணிகளுக்கு எந்தத் தொழிலில்தான் அந்தச் சந்தேகமில்லை. வக்கீல் தொழிலில் எத்தனையோ கக்ஷிக்காரப் பெண்கள் இல்லையா ! பாலிய விதவைகள், புருஷரால் தள்ளப்பட்டு ஜீவனும்சம் கேட்கும் பெண்கள், பங்காளி தாயாதியால் வருந்தும் பெண்கள், தகப்பனின் பிள்ளையில்லாச் சொத்திற்கு வார்சுதாரியான பெண்கள், தகப்பனின் பங்காளி

களின்மீது வியாஜ்யம் போடும் பெண்கள், ஸ்வீகாரம் செய்து கொண்ட பெண்கள் அடேயப்பா! எத்தனைவிதம் இல்லை. அத்தனை பெண்களிடமும் நீங்கள் சந்தேகப்படவேண்டியதுதான். நாதனற்ற ஓர் நங்கையின் சொத்திற்கு வக்கீலை எக்ஸிக்யூட்டராகவோ, ரிஸீவராகவோ நியமித்துவிட்டால், அதோடு குடி முழுகிவிட்டது என்று குதிக்கமாட்டீர்களா! போதும்; வாயை மூடுங்கள். வீணாகக் குழந்தையைக் கடிந்து பேசவேண்டாம்.

சிதம் :—ஏதேது! நீயே பெரிய சட்டம் பேசிவிடுவாய்போல் இருக்கிறதே. எனக்கு என் இந்தக் கர்மங்கள்? எக்கேடாவது கெட்டுத் தொலையுங்கள். நான் நிம்மதியாய்க் கிராமத்திற்குப் போய் உட்கார்ந்துவிடுகிறேன். இந்தமாதிரி சனியன்களெல்லாம் காதில் விழாது; கண்ணில் படாது. காதல் கல்யாணமோ, கலியுக மோதிரம் மாத்தல் கல்யாணமோ நடக்கட்டும்—என்று கூறிச் சலிப்புடன் எழுந்து போய்விட்டார். விவாகத்தில் பேச்சு ஆரம்பித்து, விவகாரத்தில் முடிந்துவிட்டதும் மீனலோசனியம்மாள் மௌனமாக உள்ளே போய்விட்டாள்.

## 5

### சங்கீத மகிமை—சஞ்சலப் பதுமை

உலகத்தில் பலருக்கு அதிக ஆசையாயும், நாகரிகமாயும் நல்லதொரு ஜாதி நாயை வளர்ப்பது தற்காலம் வெகு பேஷனாக ஆகிவிட்டது. ஆண் பெண் இரு பாலரும் இப்போது குச்சு நாய்களையும், வேட்டை நாய்களையும் தாம் போகும் இடத்திற்கெல்லாம் காரில் அதற்கு முதல் ஸ்தானங் கொடுத்து அழைத்துச் செல்வதும், அதற்கு அன்பு முத்தங்கள் அளிப்பதும் சகஜமாகிவிட்டது.

இத்தகைய நாகரிகமான காலத்தில் ஆத்மநாதன் அந்த நாளுக்கு விதிக்கு விலக்காகப் பூனையை வைத்து வளர்க்க ஆரம்பித்

183029

தான். பூனையையும் வளர்க்கிற முறைப்படிக்கு வளர்த்தால், அதனல் அனேக உபகாரங்கள் உண்டென்பது பழய காலப் பாட்டிமார் களுக்குக் கூடத் தெரியும்.

நாய் ஒன்று சதா வீதி கேட்டில் காவல் இருப்பதை ஆத்ம நாதன் போகும்போது, வரும்போது தடவிக்கொடுத்துவிட்டுச் சென்றுவிடுவான். ஆனல் பூனைக்கோ, தானே பாலை வார்ப்பதும் தன்னுடன் சதா விளையாடச் செய்வதும் ஓர் வேடிக்கையாகக் கொண்டான். அதுவே பழக்கமாகிவிட்டதால், இப்போதும் அவ னுடன் சதா ஓர் பூனை கொழுக்கு மழுக்கென்று வளர்ந்து வரு கின்றது. முக்கியமாக ஆஸ்பத்திரியில் இரண்டு மூன்று பூனைகளை வேண்டுமென்றே வளர்க்கும் விநோதம் எல்லோருக்கும் வியப்பா யிருந்தது. ஆஸ்பத்திரியிலுள்ள துணிகளை எலிகள் கடிக்காம லிருப்பதற்கு அந்தப் பூனைகளின் குரலைக் கேட்டால் எலிகளுக்குப் போதும் என்றே வளர்த்து வந்தான்.

சகுனத்திற்கு மிகவும் நிஷித்தமான இந்த அற்ப ஜெந்துவிடம் பெரிய டாக்டராகிய ஆத்மநாதன் அன்பாயிருப்பதானது எல்லோ ருக்கும் மிக்க ஆச்சரியமாக விருந்தது. வஸுந்தரா அனேக தடவை களில் அந்தப் பூனையுடன் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருப்பதைக் கண்ட மற்ற லேடி டாக்டர்கள் பரிகஸிப்பார்கள்.

ஆஸ்பத்திரிக்கு வருவோர் போவோர்களும் இதைப் பெரிய சகுனத்தடையாக எண்ணி வெறுப்பார்கள். அவைகளை ஆத்ம நாதன் செவியில் வாங்கவேமாட்டான். ஆகையினல், சில குறும் புக்காரர்கள் அப் பூனையைப் பிடித்துக் கோணியில் கட்டி வெகு தூரத்திற்கப்பால் கொண்டு விட்டுவிட்டார்கள். பூனையைக் காணுது ஆத்மநாதனின் மனம் தவித்தது. 'எப்படி போயிற்ரே, எங்கே போயிற்ரே ?' என்று கலங்கினன்.

ஆனல், நான்கு தினத்திற்குள் அதே பூனை நாயைப்போல் மோப்பம் பார்த்துக்கொண்டே வந்துவிட்டதை அறிந்து டாக்டர் பெரிதும் சந்தோஷப்பட்டார். வேண்டுமென்றே அப் பூனையைத் தொலைத்துவிட வேண்டுமென்று எத்தனையோ பிரயத்தனம் செய்த சிலருடைய சூழ்ச்சி பலனை யளிக்காது போய்விட்டது.

[library stamp]

ஆஸ்பத்திரியைச் சுற்றிலும் பெரிய தோட்ட மிருப்பதால் ஆஸ் பத்திரியில் எபோதும் சிலு சிலுப்பான காற்றும், நிழலும் நிறைந் திருந்தன. அதனுல் நோயாளியைச் சேர்ந்தவர்கள் சௌகரியமாக இருக்க வசதியிருந்தது. நோயாளிகளும் அவர்களைச் சேர்ந் தோரும் காற்றுக்காக வெளிவராண்டாவில் கட்டிலிலும் கீழேயு மாகப் படுத்திருந்தார்கள்.

இரவு நிலவின் வெளிச்சம் பால்போலிருந்தது. அச்சமயம் ஒரு நோயாளிக்கு ஆகாரங் கொடுப்பதற்காக அவனைச் சார்ந்த அம்மாள் எழுந்திருக்கையில் வராண்டாவில், பாம்பு ஒன்று ஊர் வதைக் கண்டதும் "ஐயோ! பாம்பு!! பாம்பு!!" என்று கத்தி அலறியடித்துக்கொண்டு ஓடினுள்.

ஒரு விநாடிக்குள் அங்கு படுத்திருந்த எல்லோரும் திடுக் கிட்டெழுந்து பயந்து நடுங்கி பெரிய கூக்குரலைப் போடுகிருர்களே யன்றி பாம்பை அடிக்கத் தைரியமில்லாது தவித்தார்கள். அதே நிமிடம் அத்தனை பெயர்களும் வியக்கும்படியாய் இவர்களால் வெறுக்கப்படும் பூனையே அந்தப் பாம்பை மென்னியைப் பிடித்துக் கொன்று சித்திரவதை செய்வதைக் கண்டு, அத்தனை ஜனங்களும் சந்தோஷத்தினுலும் ஆச்சரியத்தினுலும் உள்ளம் பூரித்தார்கள்.

அச்சம்பவத்திற்குப் பிறகு பூனையை அங்கு யாருமே வெறுப் பதோ, திட்டுவதோ கிடையாது. ஆத்மநாதனைவிட வஸுந்தராவே அந்தப் பூனையை அதிகமாக நேசித்துவந்தாள். அன்று ஆஸ்பத்திரி ட்யூட்டி முடிந்ததும் அவள் தன் அறையில் பூனையுடன் விளையாடிக் கொண்டே ஸன்ன குரலில் பாடிக் கொண்டிருந்தாள்.

அதற்கு அடுத்தாற்போலுள்ள வார்டில் படுத்திருக்கும் நோயா ளிகள் இந்த ஆனந்தமான கானத்தைக் கேட்டு அவர்களின் தலை வலி, முதுகுவலி முதலிய நோயாளிகளின் பாதை தெரியாது சந் தோஷ சுகத்தினுல் தலையை ஆட்டிக்கொண்டே படுத்திருந்தார்கள். அவர்களில் ஒருவன், "இன்னும் கொஞ்சம் உரக்கப் பாடக் கூடாதா? மெல்லப் பாடுகிருர்களே!" என்று வாய்விட்டும் கூறினுன்.

அப்போது ஆத்மநாதன் ஸ்பெஷல் வார்டிலுள்ள பேஷண்டைப் பார்ப்பதற்காக ஆஸ்பத்திரிக்குள் வருவது தெரியாது வந்தான். வார்

டுக்குள் போகாமல் வெளியிலிருந்தே எட்டிப் பார்த்துக்கொண்டே சென்றான். இந்த வார்டில் படுத்திருக்கும் நோயாளிகள், "அம்மா! அப்பா! ஐயோ!" என்று முனகிக் கொண்டிருந்தவர்கள் "கஸ்தூரி திலகம் லலாட பலகே!" என்ற ச்லோகத்தை ஆனந்த பைரவி ராகத்தில் பாடுவதைக் கேட்டதும் நோயாளிகள் ஆனந்தமாய்த் தலையை ஆட்டியும், நோயை மறந்தும் பேசியதைக் கேட்ட வுடனே ஆத்மநாதனுக்கு மிக்க வியப்பும், ஒரு மாதிரியான திகைப் பும் உண்டாகிவிட்டன. அப்படியே அசைவற்று சில விநாடிகள் நின்றான். இதற்குள் வார்டிலுள்ள சேவகன் 'டாக்டர் வந்திருக் கிறார்' என்று சொல்வதற்காக வஸுந்தராவின் அறைக்கு ஓடப் போனான். ஆத்மநாதன் அவனை இழுத்து "பேசாமலிரு" என்று வாயைப் பொத்தி, சைகை காட்டி அமர்த்திவிட்டு, அப்படியே நிற்பது உள்ளே இருப்பவர்களுக்குத் தெரியாது கவனித்தான்.

நோயாளிகள் 'அம்மா! அப்பா!' என்று கத்தாது படுத்திருப் பதும் வஸுந்தராவின் அற்புத கானமும் இவன் வியப்பை பின்னும் கிளறிவிட்டன. 'இன்னும் கொஞ்சம் உரக்கப் பாடக் கூடாதா!' என்று ஒரு நோயாளி சொல்லியதைக் கேட்டவுடனே டாக்டர் ஒரே பாய்ச்சலாக வஸுந்தராவின் விடுதிக்குள் தாவினான்.

தன் போக்காகப் பாடிக்கொண்டிருக்கையில், திடீரென்று டாக்டர் அகாலத்தில் வந்துவிட்டதால், வஸுந்தரா லஜ்ஜையினா லும், பயத்தினாலும் பாட்டை நிறுத்திவிட்டு அலறியவாறு எழுந்தாள்.

ஆத்மநாதன் தணிந்த குரலில், "நிறுத்தாதே! உன்னைத் தடைசெய்யவோ, கோபிக்கவோ நான் வரவில்லை. எங்கே சற்று உரக்கப் பாடு. நன்றாகப் பாடு; பயப்படாதே, காபி ராகத்தில் பாடு. உம்....நிறுத்தாதே" என்று கூறிக்கொண்டே அவளை உட் காரச் செய்தான்.

ஒரு நாளுமில்லாமல் திடீரென்று தன்னை இம்மாதிரி பாடச் சொல்வதைக் கேட்டதும் அவளுக்கு அபாரமான ஆச்சரியம் உண் டாகிவிட்டது. "என்ன டாக்டர்! என்னைப் பரிகசிக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

ஆத்ம :—ச்சு, பேசாதே. முதலில் பாடு. 'கஸ்தூரி திலகமே' பாடு. எங்கே ஆரம்பி. காரணமாகத்தான் சொல்கிறேன். உம். உம்—என்று அதட்டினன். உடனே மீண்டும் காபி ராகத்தில் அதே கஸ்தூரி திலகத்தை அவள் பாட ஆரம்பித்தாள்.

ஆத்மநாதன் சந்தடி செய்யாமல் மறுபடியும் வார்டுக்குள் எட்டிப் பார்த்தான். நோயாளிகள் தம் தம் போக்காக "ஆஹா! என்ன கர்ணமிருதம். என்ன கானமிருதம். எந்த மஹராஜியோ பாடுகிருள். அவள் நன்ருக இருக்கவேண்டும். வார்டரும் டாக்டரும் பார்த்துவிட்டால், புண்ணியங் கட்டிக்கொண்டு 'தஸ் புஸ்' என்று கூக்குரலிட்டு நிறுத்திவிடச் செய்வார்கள். என்ன ஆனந்தமாய் இருக்கிறது!" என்று அவர்கள் கூறுவதைக் கேட்கக் கேட்க ஆத்மநாதனின் ஆச்சரியம் கரை புரண்டது. சந்தோஷம் ஒரு புறம் பூரிக்கிறது.

இதற்குள் வஸுந்தரா, என் தன்னை இப்படிப் பாடச் சொல்லி விட்டுப் போனுன் என்கிறதை அறியும்பொருட்டு பாட்டை நிறுத்தி விட்டு மெல்ல வெளியே வந்து தலையை நீட்டினுள். இதை அறிந்த ஆத்மநாதன் முகத்தைச் சுளித்துக் கையை உதறிக்கொண்டு, இங்கு வந்து "போ! போ! உள்ளே போ! வஸுந்தரா! பாடு; பாடு. நீ இங்கு எட்டிப் பார்க்காதே. போ!" என்று கூறி, அவளைப் பிடித்து உள்ளே இழுத்துக்கொண்டு வந்தான்.

வஸுந்தராவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவள் பிரமித்த படியே "இதென்ன டாக்டர்! விஷயத்தைச் சொல்லாமல் 'பாடு பாடு' என்கிறீர்களே! என்ன சமாசாரம் சொல்லுங்கள்" என்று கேட்டாள்.

ஆத்ம :—இரு; இரு. இப்போது கேட்காதே என்று சொன்னேனு இல்லையா! நான் சொல்கிறபடி நீ கேட்கவேண்டும். பாடு, பாடு. உடனே பாடு—என்று கூறி அவளை நாற்காலியில் அமர்த்தி விட்டு, பாடச்செய்தான். விவரம் புரியாமலேயே மீண்டும் வஸுந்தரா தன் கானமிருதத்தை அள்ளிப் பொழிய ஆரம்பித்தாள்.

ஆத்மநாதன் வார்டின் வெளிப்புறத்திலிருந்தபடியே கவனித்தான். நோயாளிகளில் இருவர் ஆனந்தமாகத் தூங்குவதையும்

மெல்லியதாகக் குறட்டை வருவதையும் பார்த்தான். அவனை அறியாது ஒருவிதமான மனவெழுச்சியும் சந்தோஷமும், ஏதோ ஒரு எதிர்பாராத அதிசயத்தை அடைந்துவிட்டது போன்ற திருப்தியும் உண்டாகியதால், அந்த ஆனந்தத்துடன் அவ்விடத்தை விட்டு வஸுந்தராவின் விடுதிக்கு வந்தான்.

வஸுந்தரா பாட்டை நிறுத்திவிட்டு, ஆவலுடன் "என்ன டாக்டர்! ஏன் இப்படிப் 'பாடு, பாடு' என்று வேடிக்கை செய்தீர்கள்? என்ன புதுமையைக் கண்டீர்கள்?" என்று கேட்டாள்.

ஆத்ம :—(அபாரமாய்ப் பொங்கி வரும் அன்புடனும், ஆர்வத்துடனும்) இதுவரையில் நான் ஏமாந்துதான் போய்விட்டேன். உனது இத்தனை படிப்புக்கும், வேலைத் தொந்தரவுக்கும் இடையில் இப்படிப்பட்ட அபார சங்கீதத்திற்கும் எப்படி இடங் கொடுத்துப் பழகினுய் என்பதை நினைக்க எனக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரியமாய் இருக்கிறது. உன்னுடைய கானம் சாதாரணமாக இல்லை. அதிலிருந்து தேன் பெருகுகிறது போலவே இருக்கிறது. இதுவரையில் நீ இத்தனை அழகாகப் பாடியதை நான் கேட்டதே இல்லையே!

வஸு :—இதென்ன! திடீரென்று என் பாட்டைப்பற்றி பிரமாதமாக ஸ்தோத்திரம் செய்கிறீர்கள்? என் பாட்டை நீங்கள் கேட்பதற்கு இது பரியந்தம் பிரியப்படவில்லை. அவகாசமுமில்லை. என் பொழுது போக்கிற்கும், எம்பெருமானைப் பஜிப்பதற்கும் உபயோகப்படுவதற்கு ஏதோ பாடினேன். எதற்காகக் கேட்கிறீர்கள்?

ஆத்ம :—வஸுந்தரா! நீகூட என்ன இப்படி குற்றலாகக் கூறுகிறுயே! உன் பாட்டைக் கேட்கவா எனக்குப் பிரியமில்லை என்கிறுய். கரும்புத் தின்பதற்குக் கூலி கேட்பதுபோலல்லவா உன் வார்த்தை இருக்கிறது! என் செல்வச் சகோதரி இத்தனை அருமையாகப் பாடுகிறுள் என்றதை நான் அறிந்திருப்பேனேயானுல் இன்னும் ஒரு சுற்று பெருத்தல்லவோ போயிருப்பேன்?

செல்வச் சகோதரி என்றதைக் கேட்டதும் வஸுந்தராவின் முகம் சுருங்கித் தலை கவிழ்ந்தது. வேறு புறமாகத் திரும்பிக்கொண்

டாள். இதை நமது இளவல் கவனிக்காமலில்லை. ஆச்சரியத்துடன் அவளை நோக்கி "என்ன வஸுந்தரா! இன்னுமா நீ மாறவில்லை? ஐயோ! மஹா புத்திசாலியாகிய உனக்கு நான் சொல்லவேண்டியது என்ன இருக்கிறது. இதோ பாரு; இப்படித் திரும்பிப் பாரு. என் செல்லமல்ல. அடாடா! கண்ணீர் கூடவா வழிகிறது" என்று கூறிக்கொண்டே தன் கைக்குட்டையை எடுத்தான்.

வஸுந்தரா சடக்கென்று ஒரு சோகச் சிரிப்புச் சிரித்துவிட்டு, "இந்தக் கைக்குட்டைக்குக் கூட நான் அருகதையல்ல. அதை எடுத்துக் கொள்ளுங்கள். ஏதோ நான் செய்த மலைக்குவியலைப் போன்ற பாவத்தில் கடுகளவாவது புண்ணியம் செய்திருப்பதனால்தான் என் சங்கீதமாவது தங்கள் செவிக்குள் புகும் பாக்கியம் செய்திருந்தது. அதுவே போதும். என் சங்கீதத்தின் உயர்வும் தாழ்வும், வளர்ச்சியும் பெருமையும் எல்லாம் தங்களைப் பொருத்ததுதான்" என்றாள்.

ஆத்ம:—ஐயோ! நான் என்ன செய்வேன்? வசுந்தரா! உன்னைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாயிருக்கிறதே! நான் எத்தனை தரந்தான் மனத்தை மாற்ற நினைத்தாலும் உன் மீது எனக்குள்ள அளவிடமுடியாத அன்பு, ஆத்மாவை யொட்டியதாகவும், சகோதரியைப்போலவும் தோன்றுகின்றதேயன்றி வேறுவிதமாக....

வசுந்:—டாக்டர்! தாங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். 'சகோதரி, சகோதரி' என்று மட்டும் கூறி என் மனத்தைப் புண்படச் செய்யவேண்டாம். என்னை வேலைக்காரியைப் போன்று எண்ணினாலும் எனக்குச் சம்மதந்தான். உங்களிடத்தில் இந்தப் பூனை செய்த பாக்கியங்கூட நான் செய்யவில்லை என்பதை என் உள்ளம் அறியாமலில்லை. எல்லாம் என் தலைவிதி. என் சோதனை.

ஆத்ம:—வசுந்தரா! இதோ பாரு! உனக்கு நிறைய அண்ணனும், தம்பியும் இருப்பதால் அவ் வாஞ்சையை நீ அனுபவித்துச் சலித்துவிட்டாய். நானோ உடன் பிறந்தவர்கள் இல்லாத மகாபாவி. ஆதிமுதல் உன்னை என் தாயின் வயிற்றில் பிறந்த சகோதரியைப் போலவே நேசித்துவந்துவிட்டதும் நீ அறிந்ததே. அத்தகைய

உன்னை நான் எப்படி வேறு விதமாக நினைப்பது? என்னதான் முயற்சித்தாலும் என் மனம் இடங்கொடுக்கவே இல்லை.

உன் புத்திசாலித்தனத்திற்கும், தொழிலின் சாமர்த்தியத்திற்கும், அழகுக்கும் உனக்குத்தக்க கண்ணாளன், உன்னை உயிருக்குயிராகக்காதலிக்கும் உத்தமன் கிடைக்காது உலகம் இருண்டுவிடாது. நானே தேடி மணம் செய்வித்து இன்புறக் கூடாதா?

வசுந் :—ஹா! ராம ராம! உலகத்திலுள்ள சகல வியாதிகளுக்கும் வைரியாகவிருந்து சம்ஹரிக்கும் நீங்கள் ஏன் இம்மாதிரி சொல்லவேண்டும்? உங்களையே நீங்கள் எந்நிலைமையில் வைத்துப் பாருங்கள். அப்போதாவது எனக்கு நீங்கள் செய்ய விருக்கும் உபகாரத்தின் துன்பம் தெரியவரும். எனக்குக் கல்யாணமென்கிற பேச்சையே யாரும் எடுக்காதிருப்பார்களானால் அதுவே எனக்குச் செய்த பேருதவியும் நன்மையுமாகும்—என்று கூறிக் கொண்டே கண்ணீர் வழிய அவ்விடத்தை விட்டே போய்விட்டாள்.

ஒன்றுமே தோன்றாது நிற்கும் ஆத்மநாதனின் மனம் கலங்கியது. ஆனால் சகோதரி வாஞ்சை மலைபோல் வளர்ந்துவிட்டதை அவனால் அசைக்கவே முடியாது தவிக்கின்றான். "காதலில்லாது கல்யாணஞ்செய்துகொண்டு என்ன வாழ்க்கை நடத்துவது? அது ஓர் வாழ்க்கையா?" என்று எண்ணியபடியே வசுந்தராவைப் பின் தொடர்ந்தான்.

கல்யாணி :—போதுமே!....இப்படி தா....தை....என்று தேவடியாக் குட்டியைப்போல் ஆடவிட்டு, பெண்ணை வளர்க்கும் சவரணை.

ரங்கநாதன் :—பேஷ்! உன்னுடைய கரண்டி நாட்டியம், கல்சட்டி நாட்டியம், போட்டா போட்டி நாட்டியங்களைவிடப் பரத நாட்டியம் குறைந்து விட்டதா?

வத்ஸலா :—இது கண்ணாடியின் ப்ரதிபிம்பம்.

வத்ஸகுமார் :—கண்மணீ! என் கண்ணீர் வழிகிறது?.... இதுவா?....என் மாமியார் கொடுத்த பரிசு.

இதுபோன்ற அதி ருசிகரமான சம்பாஷணைகள் அடங்கிய "வத்ஸகுமாரை" இப்போதே வாங்கிப்படித்து இன்புறுங்கள்.

விலை அணா 8. சந்தா நேயர்களுக்கு ஆறு அணாதான்.

# 6

## மங்கையின் குழப்பம்—மாசிலா மருத்துவம்

வருத்தந் தெரியாத சந்தோஷ வாழ்க்கையில் இருப்பவர்களுக்குப் பிறருடைய வருத்தமோ, கவலையோ ஒன்றுமே கண்ணுக்குத் தெரியாதல்லவா? தங்களுடைய குசால் கொம்மாளத்தில் பிறருடைய நோயும் கூடக் கண்ணுக்குத் தெரியாது; வார்த்தையும் காதுக்குக் கேட்காது.

இந்த ஆஸ்பத்திரியிலுள்ளவர்களில் இரண்டு மூன்று லேடி டாக்டர்களும், சில நர்ஸ்களும் அதே கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பேஷண்டைப் பார்க்க வருகிறார்கள் என்றாலே சில நோயாளிகளுக்குக் காபராவும், சிலருக்குப் பயமும் வெறுப்புங்கூட உண்டாகிவிடும். "பச்சை மிளகா வந்துடுத்தா! கொள்ளிக் கோடப் பானெ, கொண்டார்க்கு மாப்பானெ" என்று தமக்குள் எண்ணிப் பெருமூச்சு விடுவார்கள்.

அந்தப் புண்ணியவதிகள் நோயாளிகளைப் பார்க்க வந்துவிட்டால் போதும். சிடு சிடுவென்று சீறி விழுந்து, "சே! சும்மா ஏன் கத்தறே? ஆகாத்யம் செய்தால் நோய் வாங்கி விடுமோ! நீங்கள் போடும் கூச்சலில் பக்கத்திலிருப்பவர்களுக்குத் தூக்கமே பிடிக்கிறதில்லே. உம்....பேசாமெ கிட" என்று அதட்டுவார்கள்.

நோயாளிகள் கெஞ்சிய குரலில், "அம்மா! டாக்டரம்மா! பாதை தாங்க முடியலெயே! என்ன செய்றது? நல்ல மருந்தா குடுங்களேன். தலெயே ஒடச்சிகிணு போவுதே!" என்று பரிதாபமாகக் கேட்டால், "சே! நல்ல மருந்துக்கும் கெட்ட மருந்துக்கும் உன்னைத்தான் கேட்கவேண்டும். கொடுப்பதெல்லாம் மருந்தில்லாமல் தண்ணியா! கெழப்பாவி! நீ பிழைத்து யாரைக் காப்பாத்தணம்? அப்படிப் போனால் போயேன்; காடெல்லாம் எலும்பாகிவிடுமோ?" என்று வெடுக்கெனக் கூறும்போது அந்த நோயாளியின் வயிறு எப்படி எரியும்? மனம் என்ன கொதிக்கும்? சும்மா இருப்பார்

களா? அவர்கள் ஆத்திரத்துடன் வயிறெரியச் சாபமிட்டே தீரு வார்கள் அல்லவா?

டாக்டர்களிடம் அடைக்கலமென்று விழுந்துவிட்ட நோயாளி களை டாக்டர்கள் இம்மாதிரி சீறி விழுந்து பேசினால், அவர்கள் நோய் குணமாவ தெப்படி? பிழைத்து வீடு போய்ச் சேருவது எப்படி? இத்தகைய மஹா தேவிகள் ஆத்மநாதனிடத்தில் மட்டும் வெகு மரியாதையாயும் அடக்க ஒடுக்கமாயும் நடந்து கொள்வதால், இவர்களைப்பற்றி அவனுக்கு மிகவும் மதிப்பாகவே இருந்தது.

மூன்று பெயர்களும் தனித்தனியே ஆத்மநாதன்மீது ஒரு கண் வைத்திருக்கும் ரகஸ்யம் அவர்களுக்குள்ளேயே ஒருவருக்கும் தெரி யாது. ஆத்மநாதனுக்கு அசலே தெரியாது. தொழில் முறையில் அவர்களுடன் பேசுவதைத் தவிர மற்ற போது அவர்கள் நின்ற இடத்தில் கூட நிற்கமாட்டான். "எந்த சமயம் வாய்க்கும் அவ னுடன் பேசுவதற்கு?" என்று காத்திருக்கும் இம் மூவருடைய ரகசியத்தை வஸுந்தரா மட்டும் எப்படியோ தெரிந்துகொண்டு விட்டாள்.

மூவரும் ஒரு பதார்த்தத்தை இச்சிப்பதனால் அவர்களுக்குள் உண்டாகும் பொறாமையினால் எந்த விதமான தீங்கு நேருமோ என்ற பயம் மட்டும் உள்ளூற அவளுக்கு இருந்து வந்தது. இதை ஆத்மநாதனிடம் தெரிவிக்கவும் பயந்து அஞ்சினாள். ஆத்மநாதன், தன்னைக் காதலிக்காது சகோதர அன்பு கொண்டிருப்பது மட்டும் தான் செய்த பாவம் என்று எண்ணி, மனம் நோவாளே யன்றி ஆத்மநாதனுக்கு இவர்களால் யாதொரு தீங்கும் நேராத வண்ணம் பார்த்துக்கொள்வது தன் கடமை என்று கங்கணங் கட்டிக் கொண்டாள்.

ஆத்மநாதன், முன் அத்தியாயத்தில் கூறிய வார்த்தைகளுக் காக வஸுந்தரா கண்ணீர் பெருக எழுந்து போனவளை அவனும் பின் தொடர்ந்துசென்று, "வஸுந்தரா! வஸுந்தரா! இங்கே வா; எங்கே போகிறாய்?" என்று கூப்பிட்டான்.

வஸுந்தரா தழுதழுத்த குரலில், "டாக்டர்! நான் எங்கே போனால்தான் என்ன? என்னிடம் எமன்கூட அணுகமாட்டான்.

அவனுக்கும் என்னைக் கண்டால் வெறுப்புத்தான். நான் எங்கும் போய்விடமாட்டேன். எனக்குப் போக்கிடம் வேறு உண்டா! நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன். இனிமேல் என் விவாகத்தைப்பற்றிப் பேச வேண்டாம். 'சகோதரி' என்று கூப்பிட்டு என் மனத்தைப் புண்படச் செய்யவும் வேண்டாம்.

'இப்பிறவியில் என்னுடைய ஆசை யெல்லாம் யாதெனில்;—உங்களுடன் கூட இருந்து உங்களுக்குப் பணி செய்வது; பிறருக்கு உதவி செய்வதுமே யாகும். என் ஜீவிதம் பூராவும் பிறருக்குப் பயன்படும்படி உழைக்கும் அருளைக் கடவுள் செய்தால் போதும். என் விதிப்படிக்கு என் வாழ்நாள் முடியட்டும்' என்று வெறுப்புடன் கூறினாள்.

ஆத்ம:—வஸுந்தரா! நீ இம்மாதிரி பேசினால் நான் என்ன செய்வேன்? நான் பகவானை என்ன வேண்டுகிறேன் தெரியுமா? உன் மனம் மாறி உனக்குக் கல்யாணமாகி, நீ சந்தோஷமாக வாழ்க்கை நடத்தவேண்டுமென்றும், நான் என் மனப் பூர்வமான காதல் உண்டாகிய மங்கையை மணக்க வேண்டுமென்றும் நாம் இருவரும் சந்தோஷமாய்த் தொழில் நடத்தி இன்புறவேண்டுமென்றும் இதற்குப் பகவான் கிருபை பாலிக்க வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றேன். அக்காலம் வருமென்று எனக்குப் பரிபூர்ணமான நம்பிக்கை யுண்டு. தெரியுமா?

வசுந்:—டாக்டர்! உங்களுக்கு அக்காலம் கட்டாயம் வரும். எனக்கு ஸ்வப்பனத்தில்கூட வாராது என்பதுதான் எனது உறுதி—என்று பேசிக்கொண்டே இருக்கையில், மேற்படி மூன்று லேடி டாக்டர்களில் ஒருத்தி அலையக் குலைய அங்கு ஓடி வந்தாள்.

இவர்கள் இருவரும் இத்தனை அன்யோன்யமாக வீற்றிருந்து பேசுவதைக் கண்டதும், தான் வந்த காரியத்தையும் மறந்து பொறாமையின் கவசத்தில் மறைந்து சிடு சிடுவென்று கடுத்த முகத்துடன் ஒரு பார்வை பார்த்தாள். இப் பார்வையின் கருத்தை வஸுந்தரா ஒரு நொடியில் அறிந்துகொண்டாள்.

ஆத்மநாதனுக்கு விளங்கவில்லையெனினும், ஏன் இம்மாதிரி பார்க்கவேண்டுமென்கிற பெரிய சந்தேகம் உண்டாகியது. அங்கு அத்தனை தடபுடலாக வந்தவள் பேசாது நிற்பதைக் கண்டதும்

டாக்டரே அவளை நோக்கி, "என்ன சமாசாரம்? எங்கே வந்தீர்கள்?" என்றான்.

இக் கேள்வி கேட்ட பிறகே அந்த மகாதேவி சற்று உணர்ச்சி பெற்றவளாய், "ஓ! மன்னிக்கவேண்டும்....இரண்டாவது வார்டிலுள்ள 10-ம் நெம்பர் பேஷண்டுக்குத் திடீரென்று உடம்பு அதிகமாகி விட்டது. உடனே வரவேண்டும். ஜுரம் 105 ஆகிவிட்டது. ஐஸ் வைத்தும் குறையவில்லை. நாடி கூட இறங்கிக் கொண்டே வருகிறது" என்று கூறினாள்.

இதைக் கேட்ட ஆத்மநாதன், வஸுந்தரா இருவரும் ஓட்டமாக ஓடினார்கள். நோயாளிக்கு இஞ்செக்ஷன் செய்தும் மருந்துகளைக் கொடுத்தும் பக்கத்திலேயே இருந்து அரை மணி நேரம் கவனித்தான். நோயாளியின் ஜுரம் இரண்டு டிக்ரி குறைந்ததும் அவன் சற்றுக் கண்ணைத் திறந்து பார்த்தான்.

இந்த டாக்டரிடம் அவனுக்கு அசாத்ய நம்பிக்கையும் பிரீதியும் உண்டாகையினால் டாக்டரின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "டாக்டர்! எனக்குப் பயமாயிருக்கிறதே! என் மனைவியின் மனம் வருந்தாது நான் பிழைப்பேனா? என் மனைவியின் பொருட்டாக வாவது நான் பிழைக்கவேண்டும். டாக்டர்! அவள் என்மீது உயிரெல்லாம் வைத்திருப்பவள்; இளமைப் பருவத்தினள். அவளுடன் கூடப் பிறந்தவர்கள் ஆறு சகோதரிகள்.

அவள்தான் நான்காவது பெண். மற்ற மூவரும் பாலிய விதவைகள். அவளாவது சந்தோஷமாக வாழவேண்டி அவள் பெற்றோர்கள் தவம் செய்கிறார்கள். எனக்கு ஏதாவது இடைஞ்சல் நேருமாயின் அவள் தீயிட்டுக்கொண்டு இறந்துவிடுவாள். டாக்டர்! வெட்கத்தை விட்டு நான் இப்படிப் பேசுகிறேன் என்று நினைத்துப் பரிகஸிக்காதீர்கள். தாங்களும் என் போன்ற வாலிபப் பருவத்தினராதலால், என் விசனம் எத்தகையது என்பதை அறிவீர்கள் என்ற நம்பிக்கையால் சொல்கிறேன்." என்று பேசமாட்டாது கூறினான்.

ஆத்ம:—இதோ! உனக்கு ஒரு விதமான பயமுமில்லை. நீ கல்லாலடித்தாலும் சாகமாட்டாய். நீ பயப்படவேண்டாம். உன்

மனைவிக்கும் நானே தைரியம் சொல்கிறேன், இங்கு வேண்டு மானாலும் வரவழைக்கிறேன். நேற்று, சற்றுக் குறைந்திருந்த ஜுரம் இன்று இத்தனை அதிகமாவதற்குக் காரணம் நீ ஏதாவது அபத்யம் செய்திருக்கவேண்டும் என்றுதான் எனக்குத் தோன்று கிறது. என்ன அபத்யம் செய்தாய்? உடனே சொல்லு.

நோயாளி:—டாக்டர்! நான் ஒரு அபத்தியமும் செய்யவில்லை. தாகம் பொறுக்க முடியாதிருந்தது. அதோ அந்த டாக்டரம்மாள் வந்தார்கள். தாகம்; தண்ணீர் வேண்டும் என்று கெஞ்சினேன். எதிர்க் குழாயிலிருந்து தண்ணீரைப் பிடித்துக் கொடுத்துவிட்டார். நான் அதைக் குடித்து விட்டேன். அதுதான் எனக்குத் தெரியும்— என்று அவன் சொல்லும்போது அந்த டாக்டருக்கு முகம் சடக் கென்று மாறியது.

ஆத்மநாதனும் அவளை விரைக்க முழித்துப் பார்த்து, "என்ன காரியம் செய்தீர்கள்? குழாயிலிருந்த தண்ணீரையா நோயாளி களுக்கு அப்படியே கொடுப்பது? ஆஸ்பத்திரியின் பெயரைக் கெடுக்கவேண்டு மென்ரு இம்மாதிரி காரியம் செய்வது? இதற்கு முன்பே நீங்கள் அஜாக்கிரதையாக இரண்டொரு காரியம் செய் ததை நான் கேள்விப்பட்டும் பேசாமல் விட்டுவிட்டேன். அதான் இப்போது பிசகாகிவிட்டது. இம்மாதிரி இன்னொரு முறை ஆகிய தென்று தெரிந்தால் பிறகு விபரீதமாக முடியும். இதே காரியத்தை ஒரு பிரஸவித்தவளுக்குச் செய்திருந்தால், உடனே ஜன்னி யல்லவோ கண்டு விடும். ஜாக்கிரதை. இனிமேல் இம்மாதிரி நடக்க இடங்கொடுக்காது பார்த்துக்கொள்ளுங்கள்" என்று அதட்டினான்.

வஸுந்தராவின் எதிரில் தன்னை இம்மாதிரி அவமானப்படுத்தி யதுபோல் பேசிவிட்டதும் அந்த டாக்டரின் முகம் சுளித்து விச னம் பொங்கிவிட்டது. நோயாளி இப்படி தன் சமாசாரத்தை உடைத்து விட்டதால், அவன்மீது அதிக கோபம் பீறிக்கொண்டு வந்துவிட்டது. மெல்ல எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு நின்ருள்.

நோயாளியை வெகு கனிகரத்துடன் கவனித்து வரும் ஆத்ம நாதன் அவனுக்கு இப்போது எப்படி இருக்கிறதென்று கேட்டான்.

நோயாளி:—டாக்டர்! இந்த விக்கத்தில்தான் வலி யதிகமா யிருக்கிறது. பொறுக்க முடியவில்லே—என்ருன்.

உடனே அவனைத் தனியறை யொன்றிற்கு மாற்றிப் படுக்கச் செய்து, 'உனக்குப் பொழுது போக்கிற்குச் சற்று பாடச் சொல்கி றேன். கேட்கிருயா! உனக்குப் பாட்டுப் பிடிக்குமா?' என்ருன்.

நோயாளி:—டாக்டர்! பாட்டுப் பிடிக்காத மனிதர்கள்கூட உலகில் இருக்கிருர்களா! எங்க குடும்பமே சங்கீதத்திஞல் ஜீவிக்கும் குடும்பமாயிற்றே! தாராளமாகக் கேட்கிறேன். பாடச் சொல் லுங்கள்—என்ருன்.

உடனே ஆத்மநாதன் "வஸுந்தரா! எங்கே உன் கானமிரு தத்தை—கான சஞ்சீவியைச்—சற்றுக் கொடு பார்க்கலாம்" என் ருன். வஸுந்தராவுக்கு முன்பு 'பாடு, பாடு' என்று கூறியதன் கருத்து இப்போதுதான் நன்ருக விளங்கியது. உடனே சற்றுதூரத் தில், ஸ்கிரீனுக்கு மறைவான இடத்தில் உட்கார்ந்து, உருக்கமான ஒரு பாட்டைச் சற்றும் கர்வமின்றிப் பாட வாரம்பித்தாள்.

நோயாளியும் வலியின் பாதைக்கு மத்தியில் சங்கீதத்தின் இன் பத்தில் சிறிது மூழ்கி கண்ணே மூடிக்கொண்டே படுத்திருந்தான். ஆத்மநாதன் அதற்கு அருகிலுள்ள வார்டுகளில் படுத்திருக்கும் நோயாளிகளைக் கவனித்தான். இந்தச் சங்கீதத்தை அவர்களில் சிலர் ஆனந்தமாய்க் கேட்டார்கள். சிலர் வெறுத்தார்கள். இரண்டையும் பார்த்துக் கொண்டான்.

வெளியில் வந்தான். முதலில் கொண்டுவிட்ட நோயாளி சற் றுத் தூங்க ஆரம்பித்ததை யறிந்ததும் தன்னறைக்குப் போய் உட் கார்ந்து விட்டான். வஸுந்தராவும் பின்னுடனேயே வந்தாள். "என்ன டாக்டர்! இன்று நீங்கள் செய்ததெல்லாம் வேடிக்கையா யிருக்கிறதே! இது என்ன காரணம்?" என்று கேட்டாள்.

ஆத்ம:—காரணம் ஒன்றுமில்லே. நான் வெகு நாட்களாக என் மனத்திலேயே ஒரு விஷயத்தை எண்ணி அது பலித மடைய வேண்டு மென்று எதிர்பார்த்துக்கொண்டே இருந்தேன். அதாவது நோயாளிகளுக்குச் சகலவிதமான வைத்திய சிகிச்சையினுலும் நோயைக் குணப்படுத்துவதுபோல, அவர்களின் பாதையைச் சங்கீ

தத்தினாலும் சிறிது போக்க முடியுமா என்று ஆராய்ச்சி செய்து கொண்டே இருந்தேன்.

ஆனால், இதைச் சில டாக்டர்கள் பரிகஸித்தார்கள். சிலர் நோயாளிகளுக்குத் தலைவேதனையா யிருக்குமென்றும் அம்மாதிரி செய்யக் கூடாதென்றும் தர்க்கம் செய்தார்கள். நான் மட்டும் எந்த வகையிலாவது இதைப் பரீக்ஷை செய்து பார்க்கவேண்டு மென்று மனத்திற்குள்ளேயே எண்ணியிருந்தேன்.

நேற்று ஓர் பிச்சைக்காரக் கூட்டம் ஆனந்தமாகப் பாடிக் கொண்டே பஜனை செய்து பிச்சை வாங்கிச்சென்றார்கள். அந்த நாதத்தைக் கேட்டு சில நோயாளிகள் ஆனந்தித்தார்கள். சில நோயாளிகள் வெறுத்தார்கள். சிலர் காதைப் பொத்திக் கொண் டார்கள். இவைகளை நான் தூர விருந்து பார்த்தேன். இதில் பற்றும் பிடிப்பும் உள்ளவர்களுக்குச் சங்கீதத்தையும் ஓர் மருந் தாகக் கொடுத்து, பலன் காணவேண்டுமென்று தீர்மானித்தேன்.

நான் எதிர்பார்த்ததற்கும், நீ இன்று பாடியதைக் கேட்டுச் சில நோயாளிகள் அலற்றுவதையும் நிறுத்திவிட்டு, ஆனந்தமாகக் கேட்டதையுங் கண்டதும் நான் கோரிய காரியம் ஜெயம் பெற்று விட்டதாகவே எனக்கு ஓர் சந்தோஷம் உண்டாகியது. அதனால் தான், பாடச்செய்தேன். உன் மருத்துவத் தொழிலைப்போல் சங்கீத மும் அபாரமான பலனைக் கொடுப்பதைப் பார்க்க என் உள்ளம் பூரிக்கின்றது. நோயாளிகளின் பாதை நீங்கி, நிம்மதி உண்டாகிய தென்றால், அந்தப் புண்ணியம் உனக்கு இல்லையா!

வஸுந்:—டாக்டர்! என் சங்கீதத்தினால் பிறருக்குக் கடுகளவா வது நன்மையிருக்குமாயின் என் ஜன்மம் சாபல்யமானதென்றே நினைக்கிறேன். அவ்வளவாவது என் விஷயத்தில் கடவுள் கிருபை செய்தால்போதும்—என்று பேசிக்கொண்டிருக்கையில் வஸுந்தரா வின் தாயாருக்கு உடம்பு திடீரென்று அதிகமாக விருப்பதாயும், உடனே வரவேண்டுமென்றும் டெலிபோன் வந்தது. உடனே இருவரும் அலறியடித்துக்கொண்டு ஓடினார்கள்.

## 7

### மரணப் பேச்சும் மாரு உறுதியும்

லக்ஷ்மியம்மாளின் வயிற்று வலியும், உப்பஸமும் அதிகரித்து விட்டதனல் எல்லோருக்கும் மிக்க பயமாகிவிட்டது. அந்த அம்மாள், "எங்கே ஆத்மநாதன் வந்தானு! வஸூந்தரா வந்தாளா?" என்று தவித்துக்கொண்டே திணறத் திணறக் கேட்டாள். சிதம்பரநாதனுக்கு உயிருக்கு உயிரான தங்கையின் மரணுவஸ்தையைக் கண்டு சகிக்க முடியவில்லே. டெலிபோன் செய்துவிட்டு தங்கையின் பக்கத்திலேயே அவளேத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

"ஐயோ! உயிர் போகிறதே! இனிமேல் பிழைக்கமாட்டேன். என் முடிவு காலம் சமீபித்துவிட்டது. ஹா! என்னல் சகிக்கமுடியவில்லேயே! இதுதான் மரணுவஸ்தையோ! திடீரென்று இத்தகைய சித்திரவதை வந்துவிட்டதே! அண்ணு! வஸூந்தராவை ஆத்மநாதனுக்கு விவாகஞ்செய்து வைக்கத் தட்டாதே. தவருதே! என்னுடைய ஆதி முதலான கோரிக்கை இதுதான்....அண்ணு!...." என்று தவிக்கின்ருள். புழுகெனத் துடிக்கின்ருள்.

அந்தச் சமயம் எதிர்வீட்டுக்குப் புதிதாகக் குடிவந்தவர்களின் பெண் ஆனந்தமாகப் பாடும் இனிய நாதம் காதில் கேட்டவுடன் லக்ஷ்மியம்மாள் துள்ளித்துடிப்பது கொஞ்சம் குறைந்தது. "ஆஹா! யாரோ பாடுகிருர்களே! எந்தப் புண்ணியவதியோ! தேவ கானம் போல் பாடுகிருளே! ஸரஸ்வதியின் அம்சமாக இருக்குமோ! பூர்வ ஜென்மத்தில் தேனே அபிஷேகம் செய்திருப்பாளோ! சாக்ஷாத் சாம கானத்தில் சிதறிய தேவகானம் போலல்லவா இருக்கிறது!" என்று மெல்ல வாய்விட்டுக் கூறியபடியே அலற்றலே நிறுத்திக் கண்ணில் நீர் முட்டப் படுத்திருந்தாள்.

அப்போது வஸூந்தராவும் ஆத்மநாதனும் அலேயக்குலேய ஓடி வந்தார்கள். இவர்கள் வருவதை தூரத்திலிருந்தே கவனித்துவிட்ட சிதம்பரம் எழுந்து போய், "மெல்ல வாருங்கள். இத்தனே நேரம் நோய் தாங்கமாட்டாது புழுவெனத் துடித்தவள் எதிர்

வீட்டில் யாரோ புதிதாகக் குடி வந்திருப்பவர்கள் பாடுகிற இனிமையில், தன்னை மறந்து படுத்திருக்கிறாள். அப்படியே இருக்கட்டும்" என்று கூறியதைக் கேட்டதும் ஏற்கெனவே சங்கீதத்தினால் நோயாளிகளின் மனச் சாந்தியை அறிந்த ஆத்மநாதனுக்குத் தாங்க வியலாத சந்தோஷமும் உத்ஸாகமும் உண்டாகிவிட்டன.

இருவரும் சந்தடி செய்யாமல் வந்து உட்கார்ந்தார்கள். சுமார் அரைமணி நேரம் ஆனந்தமாக இனிய கானம் கேட்டதும் அது நின்றுவிட்டவுடனே அபஸ்வரத்துடன் கூடிய பாட்டு ஆரம்பமாகியதும், யாரோ அடித்து எழுப்பியதுபோல் லக்ஷ்மியம்மாள், "ஆ! அம்மா! ஐயோ!" என்று முனக ஆரம்பித்தாள். ஆத்மநாதனைப் பார்த்தவுடனே, "என்னப்பனே! ஆத்மநாதா! என் ஆத்ம செல்வா! வாடா! என் கண்ணே வாடா! இப்படி வா!....இனிமேலும் மூடி வைக்காதே! என்னுடைய அந்திய காலத்தின் சூர்யோதயம் ஆகிவிட்ட தென்பதை நான் அறிந்துவிட்டேன். இனிமேல் நான் பிழைப்பது அரிது.

ஆத்மநாதா! இன்னுமா ஊசி குத்தப் போகிறாய்? இந்தக் கடைசி காலத்திலுமா என்னைக் குத்தி வதைக்கவேண்டும்? உம்.... நடக்கட்டும். குத்து, குத்து; நன்றாகக் குத்து. ஆத்மநாதா! என் கடைசீதரமான வேண்டுகோளை நான் இன்று உன்னையே நேரில் பகிரங்கமாகக் கேட்கிறேன். என் கோரிக்கையை நிறைவேற்றப் போகிறாயா, இல்லையா? என் வஸுந்தராவைக் கைவிடாமல் மணக்கப் போகிறாயா, இல்லையா? அவளும் நீயும் இருந்த அன்யோன்யத்தைப் பாழ்படுத்தாதே! உனக்காக உயிர் வாழும் உன் அருமை வசுந்தராவை நீ மணந்துகொள்வதாக எனக்கு வாக்குக் கொடு" என்று படபடப்பாகவும், தைரியமாயும் கேட்டாள்.

அந்தோ! இந்தக் கேள்விக்கு அவன் என்னதான் பதில் சொல்ல முடியும்? மனத்தில் சங்கடம் செய்கிறதே யன்றி, அத்தையின் அந்திய காலத்தை அறிந்தும், அவன் அவளைத் திருப்தி செய்ய முடியாதவனாய்த் திகைக்கிறான். முகம் சுருங்கித் தலை தொங்கியது.

இதைக் கண்ட சிதம்பரநாதன், "என்னடா இது! அவளது நிலைமை என்ன? அவள் கேள்விக்கு நீ பதில் கூறாது மௌனம் சாதிக்கும் துணிச்சல் என்னடா! இந்தச் சமயத்தில் கூட உன் மனம் இளகவில்லையா?" என்று அதட்டினார்.

ஆத்ம:—ஐயோ! நான் என்ன பதில் சொல்வேன்? எந்த சமயமாயினும் என் மனம் ஒரே மாதிரி யல்லவோ இருக்கிறது. அத்தே! உன் வஸந்தராவுக்கு ஒரு குறைவுமில்லை. அவளுக்கு என்றும் நான் தொழில் முறையில் துணையே இருப்பேன். நல்ல வரனைத் தேடி மணமும் நானே செய்து வைக்கிறேன்.

லக்ஷ்மி:—சீச்சீ! பெருந்தன்மையும், பார புத்தியுமற்றுப் பேசுகிறாய். வஸந்தராவுக்கு விதியற்று விட்டதால், தர்ம விவாகம் செய்விப்பதாகச்சொல்கிறாயோ! உன் தயாளத்துவம் அப்படி இருக்கட்டும். நீ அவளை மணக்கப் போகிறாயா, இல்லையா?

ஆத்ம:—அத்தே! என்னை மன்னித்து விடுங்கள். என் ஆருயிர்ச் சகோதரியையே நான் எப்படி மணப்பேன்? அதைக் கனவில்கூடக் கருத முடியவில்லையே! அவள் என்னுடன் பிறந்தவள் அல்லவா?

லக்ஷ்மி:—(ஆத்திரத்துடன்) ஆ! போதும்! போதும்! உன் வேதாந்தம் எனக்குத் தெரியுமடா! தெரியும். உன் மாமனின் மகளை மணப்பதற்காக எதற்கு இத்தனை சாஸ்திரங்கள் பேசுகிறாய்? இதெல்லாம் உன் தாயாரின் உபதேசமா?

ஆத்ம:—அத்தே! அத்தே! நான் சத்தியமாகச் சொல்லுகிறேன். அப்படிப்பட்ட எண்ணமே எனக்குக் கிடையாது. அப்பெண்ணைப் பற்றி நான் நினைத்தது கூட கிடையாது. என் தாயாரும் அடிக்கடி வஸந்தராவையே மணக்கும்படியாக வற்புறுத்துகிறாளே யன்றி, என் மாமன் மகளைப்பற்றி ஒருதரங் கூடச் சொல்லியதே இல்லை. இது சத்தியம். என் வார்த்தையை நம்பு. என் சகோதரியையே நான் மணப்பது என்பது என் மனச் சாக்ஷிக்கு முற்றிலும் விரோதமாக இருப்பதை நான் எப்படிச் செய்யமுடியும்?

லக்ஷ்மி:—ஆனால், மாட்டாயா!

ஆத்ம:—அத்தே! அதைத் தவிர மற்றவைகளைச் சொல்லு. அது மட்டும் என்னால் முடியாது?....தெய்வ சம்மதமற்ற காரியத்தை என்னால் செய்யமுடியாது.

லக்ஷ்மி:—என்ன! முடியாதா! இதுதான் முடிவான விடையா!

ஆத்ம:—மன்னிக்கவேண்டும். இது முடியாத காரியம்.

சிதம்:—சீச்சீ! அன்பற்றவனே! நான் நினைக்கும் சந்தேகங்களை ஊர்ஜிதப்படுத்துவதற்கு இதைவிட அத்தாட்சி வேறு என்ன இருக்கிறது? எந்த நர்ஸ், எந்த லேடி டாக்டர், எந்த கெட்டுப்

போன கழுதைகளின் மோகத்தில் மூழ்கிவிட்டாயடா! நம்ப வீட்டுக் குழந்தை, நம்ப மக்கள் மனுஷாள் என்கிற பிரீதி அணு வளவேனும் இல்லாது இப்படியா பிராணன் போகும் சமயத்தி லும் பேசுவது?....

என்று முடிப்பதற்குள், தந்தை சொல்லிய வார்த்தைகள், ஆத்மநாதனின் இதயத்தில் ஈட்டியால் குத்துவது போலாகிவிட் டன. கண்கள் சிவக்க தேகம் படபடக்க உள்ளம் துடிக்க எழுந்து நின்று "அப்பா! என்ன வார்த்தை சொன்னீர்கள்? அன்பு கூர்ந்து ஆசீர்வதிக்கும் வாயினல் இப்படியா நீங்கள் பேசுவது? எனது முன்னறி தெய்வங்களாகிய உங்கள் மீதே ஆணை வைத்துப் பேசு கிறேன். நீங்கள் சொல்கிறபடி இந்த நிமிடம் வரையில் நான் மனத் தினுலும் நினைத்தவ னல்ல. அநியாயமான வார்த்தைகளைப் பேசி என் மனத்தை வாட்டவேண்டாம். இத்தகைய மூளை கெட்ட சந்தே கத்திற்கு இனிமேல் உங்கள் உதயத்தில் இடங் கொடுக்காதீர்கள்.

சிதம் :—(சீறி விழுந்தவாறு) அடேய்! அல்ப புத்திப் பயலே! மூளை கெட்டவனே என்று சொல்வதற்காகவா 'முன்னறி தெய்வம் பின்னறி பூதம்' என்று மரியாதைப் பட்டம் வைத்துப் பேசறே! ஒரு மஹாராஜி, தன் நாத்தனுரை, "வாருங்காணும் தேவடியா முண்டே! எண்ணெ தேச்சுக்க நாழியாச்சே!" என்று அழைத்த கதைபோலிருக்கிறது, உன் மரியாதை. இத்தனை தைரியமும் துணிச்சலுமாடா உனக்கு வந்துவிட்டது? இருக்கட்டும்.

மீன :—ஐயோ! இந்த சமயத்திலா இப்படி வீண் விவாதங்கள் செய்வது? நான் எத்தனை தரம் சொல்லி முட்டிக்கொண்டேன். என் வார்த்தையை அலக்ஷியம் செய்துவிட்டு இப்படியா குழந்தையின் மனத்தைப் புண்படச் செய்வது? நீங்கள் சொல்வது மஹா பிசகு.

சிதம் :—சீச்சீ! தடிமுண்டே! தூரப்போ! நீ இப்படி இடங் கொடுத்துத்தான் அவன் குட்டிச்சுவராகி விட்டான். இந்தப் புத்தி கெட்டவனுக்குப் பரிந்து பேசுவது ஒரு கேடா! என் தங்கையின் மரணவஸ்தையைக் கூட பார்க்காமல் அவள் கேட்பதற்கு இவன் பதில் சொல்வது வெகு அழகாக இருக்கிறது....அடேய்! கடைசி தரமாகக் கேட்கிறேன். அத்தைக்கு வாக்குக் கொடுக்கப் போகிருயா, இல்லையா?

ஆத்ம :—அப்பா! நீங்கள் பேசுவதெல்லாம் விபரீதமாக இருக்கிறது. மரணத் தறுவாயிலிருப்பவளுக்குப் பொய் வார்த்தையைக் கூறி மழுப்பச் சொல்கிறீர்களா! நான் இறந்தாலும் பொய் சொல்ல மாட்டேன். அந்தக் காரியம் மட்டும் என்னால் முடியாத காரியம். வஸுந்தரா! நீயும் இது விஷயத்தில் என்னை மன்னித்துவிடு.

லட்சுமி :—போதுமடா! போதும்! குழந்தையின் அன்பு தெரியாது அவளை கட்டாத்தில் கை விட்டதுபோல நம்பிக்கை துரோகம் செய்தவனுக்கு மன்னிப்பாம். சாஸ்திரமாம். சம்பிரதாயமாம். சத்தியமாம்! தூத்து! வெட்கமாயிருக்கிறது. சரி! உன் வயித்தியம் எனக்குப்போதும். நீ இனி பெரிய மனிதனைப் வெளியே போகலாம். அடீ வஸுந்தரா! இனிமேல் வீண் கனவு காண வேண்டாம். அந்த ஆஸ்பத்திரிக்கு இனிமேல் போகவேண்டாம். அந்த மகா உத்தியோகமும் வேண்டாம். இந்தப் பிரபுவின் தபவும் வேண்டாம். என்னுடைய மரண வாக்கைத் தட்டாதே—என்று ஆத்திரத்துடன் கூறினள்.

இதைக்கேட்ட வஸுந்தரா, கண்ணீர் பெருகியவாறு, தாயின் கரங்களைப் பிடித்துக்கொண்டு, "அம்மா! நீ மகா விவேகியாக இருந்தும் ஒருவருக்கு இஷ்டமில்லாத காரியத்தைச் செய்யும்படி வற்புறுத்துவது நியாயமில்லை. என் அதிர்ஷ்டம் அவ்வளவுதான் அதற்கு யார் என்ன செய்யலாம்? உலகத்தில் இச்சித்ததெல்லாம் ஈடேறி விடுமா?....

என்று முடிப்பதற்குள், லக்ஷ்மியம்மாள் கோபத்துடன், "போருமடீ உன் வேதாந்தம்! போரும். இனிமேல் நீ ஆத்மநாதனின் முகத்திலும் விழிக்கவேண்டாம். நிர்த் தயையுடைய மனிதனின் சகவாஸம் போதும். இனி ஆஸ்பத்திரிப் பக்கம் காலை வைக்காதே! ஜாக்கிரதை. இனி, உன் தொழிலை ஏழைப் பரதேசிகளுக்கு உபயோகப்படுத்து. புண்ணியமாவது உண்டு" என்றாள்.

ஆத்ம :—அத்தே!....அத்தே!....என்மீது....

லட்சுமி :—அத்தையுமில்லை. சொத்தையுமில்லை. இங்கு வீண் பேச்சு வேண்டாம். வெளியே போ!....ஆ!....ஐயோ!....ஏதோ வேதனை செய்கிறதே! என்ன செய்வேன்?

சிதம் :—அம்மா! லக்ஷ்மீ! பகவானைப் பஜி. இந்த அல்ப நரப் பூச்சிகளை நினைக்காதே. எம்பெருமானை வேண்டு....அடேய் ஆத்மநாதா! உன் பிடிவாதம் முடிவுதானு!

லட்சுமி :—ஆத்மநாதா! வெட்கத்தை விட்டு கடைசியிலும் கடைசியாகக் கேட்கிறேன். மணக்க மாட்டாயா?

ஆத்ம :—அத்தே! பொய் சொல்லி உன்னைத் திருப்திசெய்ய நான் தயாராக இல்லை. உனக்காக ஒரு வார்த்தை வேண்டுமாயின் சொல்கிறேன். என்றைக்காவது எனக்கு வஸந்தாவின்மீது காதல் ஏற்பட்டு, அவளை விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்கிற ஆசை வருமாயின் சத்தியமாக மணந்துகொள்கிறேன். அப்படி இல்லாது என் காதல் வேறு இடத்தில் உதிக்குமாயின் அதற்கு நான் ஜவாப்தாரியல்ல. தெய்வ சம்மதம் எந்த வகையி லிருக்கிறதோ அப்படி நடக்கட்டும்.

சிதம் :—சீச்சீ! காதலாம்; மூக்கலாம். இந்த மாதிரியான நாகரிகப் பேச்சுக்கள் இங்கு வேண்டாம். நான் சொல்லியது போல் எந்த பறச்சியோ, பள்ளிச்சியோ கட்டிக்கொண்டு அழுகிறுயாக்கும். இல்லாவிட்டால் எந்த வெள்ளைக்கார துரைசானியின் வலையில் விழ்ந்து விட்டயோ! போடா, போ!

லட்சுமி :—அண்ணு! வீணுக ஏன் நீ வாயை விடுகிருய்? நம்ப குமாரசாமி சொல்லியது பொய்யில்லை. சினேக சகவாஸம் பலமாகிவிட்டது. பாட்டல்கள் பழக்கமும் ஏற்பட்டுவிட்டால், சரியாகி விடுகிறது. காதல் ஏற்பட்டால்....இந்த ஆல், உடன், ஒடு இலக்கணங்கள் யாருக்கு வேண்டும்? 'மேல வருஷம் வாழ்க்கைப் படப் போகிறேன். கழுத்தே சுகமாக விரு!' என்று ஒருத்தி சொன்னுளாம். அதுபோன்ற வார்த்தைகள் வேண்டாம்....

என்று பேச முடியாது படபடத்துப் பேசிய அதிர்ச்சியில் ஸ்வாஸம் தடதடவென்று துரத்த வாரம்பித்துவிட்டது. பார்த்துக்கொண்டேயிருக்கையில், ஒரு நிமிடத்தில் உயிர் காற்ருய்ப் பறந்து விட்டது. இத்தனை சடுதியில் பிராணன் போய்விடும் என்று யாரும் எண்ணவில்லையாதலால், ஒரே மின்சாரம் தாக்கி, அடுத்த நிமிடம் ஒரே அமர்க்களமும் அழுகையுமாகிவிட்டது.

ஆத்மநாதன் என்னதான் செய்வான் பாவம்! பிரதிதினமும் நோயாளிகளிடம் போராடிக்கொண்டே எந்த மருந்தை எப்படிச் செய்யலாம் என்றெல்லாம் மூளையைச் சிதறவிட்டுத் தவிக்கும் அவனுக்கு இச் சம்பவத்தினுலும், திடீரென்று அத்தை இறந்ததாலும், தகப்பனுர் கத்தியால் குத்துவதுபோல் பேசிய பேச்சினுலும் மனம்

உடைந்துவிட்டது. அவனால் தன் பிதா சொல்லிய வார்த்தைகளை மறக்கவே முடியவில்லை. நெருப்புக்குச் சமமாகத் தான் இருக்கையில் தன்மீது தன் தகப்பனாரே சந்தேகங்கொண்டு பேசும்படியாகி விட்டதே என்று தவிக்கிறான்.

வஸுந்தரா தன் தாயின்மீது விழுந்து புலம்புவதைக் கண்டு சகிக்கமாட்டாது, "வஸுந்தரா! எல்லாந் தெரிந்த நீயா இப்படி அழுவது? எழுந்திரு. வஸுந்தரா!" என்று கூப்பிட்டான். ஆனால், அவள் வழக்கத்திற்கு விரோதமாய்த் திரும்பியும் பார்க்கவில்லை; பதிலும் சொல்லவில்லை.

இச் செய்கை ஆத்மநாதனை மீண்டும் புண்படச் செய்து விட்டது. அத்தையின் சவத்தைச் சுற்றிவந்தான். அவள் காலைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டான். பேசாமல் அவ்விடத்தை விட்டுப் போய்விட்டான். கடலின் அலைகளுக்கும் மீறிய அலைகள் போல் மனத்தில் சகிக்க வியலாமல் செய்து வாட்டும் வேதனை அலைகளுடன் போராடிக்கொண்டே சென்றான்.

## 8

## பொறாமைப் பேய்களின் கிராதகச் சூழ்ச்சி

"ஓகோ! உன் பாடு குஷிதான். உத்தியோகத்தில் பிரமோஷன் கூட இவ் வருஷம் இருக்கும்போல் கேள்விப்பட்டேனே! நிஜந்தானா!" என்று ஆரோக்கியசாமி என்கிற டாக்டர், லேடி டாக்டர் விமலாவைக் கேட்டான்.

விமலா:—(ஒருமாதிரியாக விழித்துக்கொண்டே) பிரமோஷன் ஆகும்வரையில் நான் அங்கிருப்பதாக உத்தேசமில்லை. நேற்றே லீவுக்கு எழுதிவிட்டேன்.

ஆரோ:—ஏன்? அப்படி என்ன விசேஷம் நடந்தது?

விமலா:—விசேஷமா! அன்று ஒரு தினம் பல பேஷண்டுகளின் முன்பும் அந்த மஹா தேவி வஸுந்தராவின் முன்பும் என்னைக் கண்டபடி டாக்டர் திட்டினார். அது என் மனத்திற்கு

மிக்க விசனமாகிவிட்டது. பெண்களிடத்தில் மரியாதை தெரியாத மனிதரிடம் வேலை செய்ய எனக்கு இஷ்டமில்லை.

ஆரோ:—அப்படியா சேதி! அவனுக்கு இப்போது அதிர்ஷ்ட தேவதையின் கண் பார்வை நிறைந்திருப்பதால், துள்ளிக் குதிக்கின்றான். என்று கீழே கவிந்துவிடப் போகிறானோ யாருக்குத் தெரியும்? அதோடு அவன் எண்ணம் என்ன தெரியுமா? வஸுந்தராவின் முன்பு உன்னை அவமானப்படுத்தி, அவளுக்கு நல்ல பெயரும் வாங்கிக் கொடுத்து, அவளையே உயர்த்திவிட வேண்டுமென்பதுதான். அவன் அதற்குச் சாதகமாகத்தானே வேலை செய்து வருகிறான். இந்த உலகத்தில் தன்னைத் தவிர மற்ற டாக்டர்களெல்லாம் வெறும் அடி முட்டாள்கள் என்றல்லவோ அந்தப் பயல் நினைத்திருக்கிறான். அது கிடக்கட்டும். அவன் ஏதேதோ ஆராய்ச்சி செய்கிறானமே! அது என்ன உனக்குத் தெரியுமா!

விமலா:—என் தெரியாமலென்ன? மருந்து கொடுத்து வியாதியைக் குணப்படுத்துவதுபோல், சங்கீதத்தினாலேயே நோயாளிகளின் பாதையையும் குறைக்கப் போகிறாராம். அன்று வஸுந்தராவைப் பாடவைத்துக் கூத்தடித்தாரே....

ஆரோ:—(கட கடவென்று நகைத்துப் பின்) அட பைத்தியமே! சங்கீதத்தினால் நோயைக் குணமாக்கப் போகிறானா! அப்படியானால் அவன் இத்தனைவருஷம் படித்ததும், தொழில் செய்ததும் வீண் தானே! இனிமேல் நல்ல சங்கீத வித்வானாகப் பார்த்து, "ஸரிகம பதநிஸ ஸநிதப மகரிஸ" என்று கற்றுக்கொள்ளப் போகிறானே! பேஷ்! அதிக கர்வத்தில் மனுஷ்யனின் மூளையே மழுங்கிவிடுகிறது. அப்படியானால் நீயும் கரிஸா மரிஸா கற்றுக்கொண்டால், நல்லது தான். ஆஸ்பத்திரியில் இனிமேல் சங்கீத வித்வான்களுக்குக் கூட வேலை இருக்கிறது.

விமலா:—வஸுந்தராதான் சங்கீத வித்வாம்ஸினியாயிற்றே! அவளுக்கே இரண்டு வேலையுங் கொடுத்துவிட்டால், அவளே சொந்தக்காரியாதலால், பணச் செலவே இல்லை அல்லவா! அவளுக்குத் தாயார் இறந்துவிட்டாளாம். வீட்டில் ஏதோ கலவரமாம். என்னமோ குசமசவாம். பல பேர் பலமாதிரியாகச் சொல்கிறார்கள். ஒன்றும் புரியவில்லை.

ஆரோ:—என்? புரியாத மூடுமந்திரம் ஒன்றுமில்லையே! அப்பனுக்கும் பிள்ளைக்கும் ஏதோ லடாபுடா சண்டையாம். அப்பன் கோவித்துக்கொண்டு கிராமத்துக்குப் போய்விட்டானும். வசுந்தராவின் தாயாருக்கும் அவளுக்கும் சண்டையாம். பெண்ணை அவனுடன் சேரக் கூடாதென்று கட்டு செய்துவிட்டாளாம். இனி வஸுந்தரா ஆஸ்பத்திரியிலேயே வேலைக்குக் கூட வர மாட்டாள் என்றல்லவோ சொல்கிறார்கள். அவன் அங்கு ஏதோ சோதாத்தனம் செய்துவிட்டதாயும், அதை அவன் அத்தை கண்டித்ததாயும் கூடக் கேள்வி. அவன் கொழுப்புப் பிடித்த தடியன். எதைவேண்டுமானாலும் செய்வான். சந்தேகமே இல்லை.

சரி! நீ ஆஸ்பத்திரியை விட்டுவிட்டால் என்ன செய்யப்போவதாக உத்தேசம்? தனியாக போர்டு மாட்டிக் கொண்டு ஹாய்யாய் இருக்கலாமே! எனக்குள்ள பேஷண்டுகளிடம் நான் உன்னை சிபார்சுசெய்கிறேன். அதனால் உனக்கு ஒன்றும் கஷ்டமில்லையே?—என்று கேட்டான்.

விமலா:—என்னமோ யோசித்துக்கொண்டிருக்கிறேன். இன்னும் புரியவில்லை. உங்களைக் கலந்து யோசிக்கலாமென்றே வந்தேன். நான் நாளைக்கு மீண்டும் வருகிறேன். என்னைப் பலபேர் முன்னிலையில் அவமானப் படுத்திய அந்த டாக்டருக்குக் கொஞ்சம் சூடுபோட்டு அவமானப் படுத்தவேண்டுமென்றே என் மனம் விரும்புகிறது. அதற்கும் உங்கள் ஒத்தாசையையே நாடுகிறேன்.

ஆரோ:—அடாடா! இதென்ன பிரமாதம்? என்னுடன் கூடவே படித்துவிட்டு என்னை ஓங்கவிடக்கூடாதென்கிற எண்ணத்துடன், என் பிதாவின் பேஷண்டுகளையெல்லாம் தானல்லவோ ஸ்வீகரித்துக்கொண்டான்! லாட்டரியில் ஏதோ குருட்டாந்திசையாகப் பணம் வந்துவிட்டதால், பெரிய ஆஸ்பத்திரியும் வைத்துவிட்டான். தன் பேர் விளம்பரமாவதற்கும், தான் ஓர் பெரிய தயாள சாகரம் என்று காட்டிக்கொள்வதற்கும் சில ஏழை பாழைகளுக்கும் மருந்து கொடுப்பதுபோல் கொடுத்து வசியம் செய்து ஜனங்களை மயக்கிவருகிறான். இருக்கட்டும். ஒருகை பார்த்துக்கொள்வோம்—என்று கூறினன். இதற்குள் நேரம் அதிகமாய் விட்டதால், சதியாலோசனையுடன் அவர்கள் பிரிந்துசென்றார்கள். இந்தச் சதியாலோசனையின் தீ எம்மட்டும் பற்றி எரியுமோ யார் கண்டது?

## எதை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

ஆத்மநாதனின் உடைந்த உள்ளத்திற்கு மீண்டும் ஆறுதல் எவ்வகையில் கிடைக்கப்போகிறது? பொறுமைப் பேய்களின் கிராதகச் சூழ்ச்சிகள் எத்தகைய விபத்தை உண்டாக்கப் போகின்றன? வசுந்தராவின் சிதறிய காதலின் முடிவு என்ன? அவளுடைய பிற்கால வாழ்க்கையின் மர்மமென்ன? அனாதை நிலையத்தில் நேரப்போகும் விபரீதமான கொடிய விபத்து என்ன? அதனால் எத்தனை சங்கடங்கள் உயிர்ச்சேதங்கள் உண்டாகின்றன? தன் பிறப்பும், வளர்ப்பும், தன் வாழ்க்கையிலுள்ள அதி பயங்கரமான மர்மமும் அறியாத வனிதை யார்? காதல் சங்கிலியில் கட்டுப்பட்டுத் தவிக்கும் மூன்று ஆத்மாக்களின் முடிவு என்ன? காதல் கைகூடலா? சாதல் நிறைவேறலா? ஆத்மநாதனின் சங்கீத ஆராய்ச்சியின் பலன் என்ன? சிதம்பரநாதனின் கோபத்தின் முடிவென்ன? ஆத்மநாதன் ஜீவியத்தில் இன்பம் நிலைக்குமா? துன்பம் துளைக்குமா? பழியோரிடம் பாவமோரிடம் என்றபடி எந்தப் பழி ஆத்மநாதனின் தலையில் விழப்போகிறது? கண்டு சகிக்க முடியாத குஷ்டரோகி யார்? அவன் கதி என்ன? ஆத்மநாதனின் தயாள குணத்தின் ஜோதி எவ்விதம் பிரகாசிக்கப்போகிறது? இவைபோன்ற இன்னும் பலவிதமான ருசி மிக்க விஷயங்களை—வெகு ஸ்வாரஸ்யமாக உங்கள் கவனத்தைக் கொள்ளை கொள்வதற்கும், உங்களை மகிழ்விப்பதற்கும்—மோகினிச் செல்வி தொடர்ச்சியாகக் கொண்டு வரப் போகிறாள். படித்துக் களியுங்கள்.

# பொன்விழா ? ?

# புதிய சந்தா நேயர்களுக்கு!

16-வதாண்டுக்குச் சந்தாவைச் செலுத்திய பலர், தங்களுக்கு 15-வது ஆண்டில் வெளியான 3 நாவல்களையும் (வானக்குயில், ஜீவியச்சுழல், மாலதி) சந்தா விலைக்கே கொடுக்கும்படி கேட்டுக் கொள்வதால், அவர்களின் அவாவைப் பூர்த்தி செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால், வேண்டுவோர் உடனே ரூ. **1-8-0** அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

**உளுத்த இதயம், மகிழ்ச்சி உதயம், வத்ஸகுமார்**

இந்த மூன்று நாவல்களுக்கும் ஒரு ரூபாய் (தனி விலை ரூ. 1-6) முன்பணம் அனுப்பினால் தபாற்செலவின்றி அனுப்புவோம்.

---

## இதுவரை யாரும் அளிக்காத
# நூதன வெகுமதி

அன்பர்களின் உதவிக்கு நன்றிசெலுத்தல் கடமையல்லவா?

16-வதாண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, புதுவருஷ சந்தாவைசெலுத்துவதுடன், புதிதாக ஒருவரைச் சந்தாதாரராகச் சேர்த்து அனுப்பும் சந்தாநேயர்களுக்குப் புதுவிதமான வெகுமதியளிக்க முன்வந்துள்ளோம். அதாவது:—அங்ஙனம் உதவும் அன்பரின் முழு விலாசத்துடன் **100** தாள்கள் கொண்ட "லெட்டர் பேபர் பாட்" ஒன்றை முற்றிலும் இனாமாக அளிப்பதாகத் தீர்மானித்துள்ளோம்.

---

## ஒரு வருஷ சஞ்சிகையும் இதர நாவல்களும் இனாமாக வேண்டுமா?

1. மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு, ஒரு வருஷ சஞ்சிகை இனாம்.

2. எத்தனை புதிய சந்தாநேயர்களைச் சேர்த்து முன் பணம் நமக்கு அனுப்புகிறீர்களோ அத்தனை எட்டணா விலையுள்ள நாவல் இனாம்.

உதாரணமாக 4 சந்தா நேயர்களைச் சேர்த்தால், ரூ. 2 விலையுள்ள தியாகக்கோடி இனாம்.

183029
600 008

## நமது விளம்பர விகிதம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பக்கத்துக்கு ஒரு முறை | ரூ. | 12 | 0 | 0 |
| அரை பக்கத்துக்கு ,, | ,, | 6 | 8 | 0 |
| கால் பக்கத்துக்கு ,, | ,, | 4 | 0 | 0 |
| உள்ளட்டைக்கு ஒரு முறை | ,, | 15 | 0 | 0 |

நீண்ட கால விளம்பரங்களுக்குத் தனிச் சலுகை காட்டப்படும்.

## வெளிநாட்டு சந்தா நேயர்களே!

தமிழ்ப் பத்திரிகைகளில், வெளிநாட்டினருக்காகச் சந்தாவை அதிக மாக்காத பத்திரிகை நமது மோகினி ஒன்றுதான் என்பது நீங்கள் அறிந்த விஷயம். உள் நாட்டில் காலணு தபாற் செலவில் அனுப்பும் பத்திரி கையை வெளிநாட்டிற்கு அனுப்ப முக்காலணு ஆவதால் நமக்குச் செலவு அதிகமாயினும், தமிழ் மக்கள் யாவரும் ஒரே விலையில் நமது பத்திரி கையைப் படிக்க சௌகரியமளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சந்தாவை அதிகரிக்கவில்லை. நீங்கள் ஒவ்வொருவரும் உங்களாலியன்ற அளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்பி, உங்களுக்கு வேண்டிய இனம் புத்தகங்களைப் பெற்றுக்கொள்வதுடன், நமக்கு ஆதரவளிக்கக் கோருகிறோம். சென்ற ஆண்டுப் பத்திரிகைகளில் ஏதாவது தபாலில் தவறிக் கிடைத்திராவிடில், உடனே எழுதினால் மீண்டும் அனுப்புகிறோம்.

குறிப்பு:—விலாசத்தை இங்கிலீஷில் எழுதி அனுப்பினால், தபாலில் தவற அதிக இடமிருக்காதென்று நம்புகிறோம்.

## அன்பர்களுக்கு எமது வேண்டுகோள்

ஒவ்வொரு ஊரிலும்—முக்கியமாக ரெயில்வே ஸ்டேஷனுள்ள அல்லது அதற்கருகிலுள்ள ஊரிலும்—ஏஜண்டை ஏற்படுத்தி, நமது சஞ்சிகையையும், இதர நாவல்களையும் நமது அன்பர்களுக்குச் சுலப மாயும், அனுவசியமான காலதாமதமும், தபாற்செலவு மில்லாமலும் கிடைக்கச் செய்யவேண்டுமென்பது எமது அவா. அதைப் பூர்த்தி செய்வதற்காக நமது சந்தா நேயர்கள் நமக்கு ஏற்கெனவே ஏஜண்டுகள் இல்லாத ஊர்களிலுள்ள பத்திரிகை ஏஜண்டுகளை நமக்கு நேராக எழுதச் சொல்லியோ அல்லது அவர்களின் விலாசத்தை நமக்குக் கொடுத்தோ உதவி புரியுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## முக்கிய அறிவிப்பு

நமது அன்பர்களில் பலர், நம் புத்தகங்களுக்கு ஆர்டர் செய்கையில், தங்களுக்கு வேண்டிய இதர புத்தகங்களையும் வாங்கி ஒரே பார்சலாக அனுப்பும்படிக் கேட்டுக்கொள்வதால், அவர்களது சௌகரியத்தை உத் தேசித்து அவ்வாறே செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். ஆகையினால், அன்பர்கள் வேண்டிய புத்தகங்களின் பெயருடன், பிரசுரிப்போரின் பெயரும் விலாசமும் தெரிவித்தால், காலதாமதமின்றி வாங்கி அனுப் பக் கூடும். ஆர்டர் செய்கையில், அவற்றின் விலையுடன் தபாற் செல வுக்காக ரூபாய்க்கு இரண்டணு வீதம் சேர்த்தனுப்பவும்.

"JAGANMOHINI" Vol. XVI No. 1 Regd. No. M. 2210




தலைவலிக்கு




ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,

சென்னை கல்கத்தா பம்பாய்


Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St, Triplicane, Madras.